ஓம்.
பரப்பிரம்மணேநம:.
"ஏகம் சத் விப்ரா பஹுதா வதந்தி."

# இகபரசுகசாதனி.

வாலியம் I. } 1903ளூ அக்டோபர்மீ { புத்தகம் VI.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
11 APR 1904
MADRAS.

## மனனமாலை.

சாதிகுலம் பிறப்பிறப்பு பந்தமுத்தி
யருவுருவத் தன்மை நாம
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும்
பிரிவறநின் றியக்கஞ் செய்யுஞ்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

குன்றாத மூவுருவா யருவாய்ஞானக்
கொழுந்தாகி யறுசமயக் கூத்துமாடி
நின்றாயே மாயையெனுந் திரையைநீக்கி
நின்னையா ரறியவல்லார் நினைப்போர்நெஞ்ச
மன்றாக வின்பக்கூத் தாடவல்ல
மணியேயென் கண்ணேமா மருந்தேநால்வர்க்
கன்றாலின்கீழிருந்து மோன ஞான
மமைத்தசின் முத்திரைக்கடலே யமரரேறே.

---

சிவனறிந் தருளுவன் சீவராசியைச்
சிவன்றனை யறிந்திடாச் சீவராசிகள்
சிவனிலா விடமிலை செடசித்தெங்கணுஞ்
சிவனிலா விடி லுயிர் செகமற்றிலையே.

---

அவனசைந் திடிலொரு வணுவசைந்திடு
மவனசை யாவிடி லணுவசைந்திடா
சிவன்சத்தி யோடுறிற் செகம்விரிந்திடுஞ்
சிவன்றனித் திடில்விரி செகமொடுங்குமால்.

---

வேறுவே றாகியோடும் விரிநதிக் குலங்களெல்லாங்
கூறுமுன் னீரிணென்றாங் கொள்கைய தாகுமாபோல்
வேறுவே றாகிநின்ற விதிவழிச் சமயமெல்லாங்
கூறுமுத் தியினிலொன்றாங் கொள்கைய தாகுமன்றே.

---

யாவனொருவன் றன்னிடத்திலிருக்குஞ் சிவனைவிட்டயலே, மேவியிருக்குஞ்சிவனை நனிபூசிப்பவன் றன் வியன்கையிற், பாவியிருக்கும் பாயசத்தைவிட்டுக் கூன்கைபரந்தோடித், தூவுந்துளியைநா நுனியாற்றுய்க்குமவனேசொல்லுங்கால்.

---

ஒருவ ரிருவரோர் மூவரென நின்று
உருவு கரந்துள்ளுந் தோறுந் தித்திப்பான்
திருவமர் மார்பன் றிருக்கடி தானத்தை
மருவி யுறைகின்ற மாயப் பிரானே.

---

கொண்ட பெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர்பிறருங்
கண்டதோடு பட்டதல்லாற் காதன்மற்று யாதுமில்லை
எண்டிசையுங் கீழும்மேலும் முற்றவு முண்டபிரான்
தொண்டரோமா யுய்யிலல்லா லில்லைகண்டீர் துணையே.

---

அறிவோடறி யாமையிரண்டு மணுகாதணுகிச் சகமாகிப்
பிறியாவகை நின்றமைபாரீர் பிரியிற்றனிலா தமைபாரீர்.

---

செறிவாகி யிருந்தவர்தாமே சீவன்சிவனென்ன விரண்டாய்ப்
பிறியாவகை நின்றமைபாரீர் பிறிவிப்பகையற் றமைபாரீர்.

---

அருவாகி யகண்டமுமாகி யானந்தமுமாகிய பிரமங்
குருவாயருள் செய்தமைபாரீர் கோதின்றி நிறைந்தமைபாரீர்.

---

அல்லற்று வரும்பகலற்று வயலற்றறிவே வடிவாகிச்
சொல்லற்றுள நின்றமைபாரீர் சுகமே வடிவானமைபாரீர்.

---

பாவிபடுங் கண்கலக்கம் பார்த்துமிரங் காதிருந்தா
லாவிக் குறுதுணை யாரையா பராபரமே.

---

உண்டுபோலின்று முலகைத் திரமெனவுட்
கொண்டோன் பெற்றபலன் கூறாய் பராபரமே.

---

எத்தனையோகோடி யெடுத்தெடுத்துச் சொன்னாலுஞ்
சித்தமிரங்கிலையென் செய்வேன் பராபரமே.

---

அப்பனென்று மன்னையென்று மாரிய னென்றுமுனையே
செப்புவதுமுன்னிலையின் சீர்காண் பராபரமே.

---

தன்மயமாய் நின்றநிலை தானேதா னாகிநின்று
னின்மயமாயெல் லாநிகழும் பராபரமே.

---

எங்கணுநீ யென்றாலிருந்தபடி யெய்தாம
லங்குமிங்குமென் றலையலாமோ பராபரமே.

---

சிந்தையுமென்போலச் செயலற் றடங்கிவிட்டால்
வந்ததெலாநின்செயலா வாழ்வேன் பராபரமே.

---

## சுதேசபாஷை.

தெய்வபக்தி மதாசாரத்தின் அநுஷ்டானம் இவைகள் தற்காலத்தில் குறைந்திருக்கிறதென்பது எல்லாருக்குந் தெரிந்தவிஷயம். இதற்கு என்னகாரணமென்று சிறிது ஆலோசிப்பாம். மதவிஷயமறிந்து பகவானைத் தெரிந்து பக்திசெய்வதற்கு கல்வி அவசியம்வேண்டும். முன்காலத்தைக் காட்டிலும் தற்காலத்தில் ஏராளமான ஜனங்கள் படித்தபோதிலும் அவர்கள் முக்கியமாய்க் கவனித்துப் படிப்பது ஆங்கிலேயபாஷை. இவ்வாங்கிலேயபாஷையைப் படிக்கும் நமது சிறுவர்கள் இலக்கணம், கணிதம், சரித்திரம், பூகோளம் இவைகளையே கற்கிறார்கள். இன்னும் அதிகம் படிப்பவர்கள் சடதத்துவசாஸ்திரம், ரசாயனசாஸ்திரம், பூதத்துவ சாஸ்திரம், ஜீவதத்துவசாஸ்திரம் முதலான சில சாஸ்திரங்களைக் கற்கிறார்கள். இராஜாங்க பாஷையைப் படிப்பதும், மேற்சொன்ன சாஸ்திரங்களைக் கற்பதும் அவசியமே. இதை மறுத்தற்கு முடியாது. ஆனபோதிலும் மேலேசொன்ன விஷயங்களில் ஈசுவரனை அறிந்து அவனிடத்து அன்புபாராட்டச் செய்யுங் கிரந்தங்கள் நமது சிறுவர்களுக்கில்லை. பி. ஏ., பரிட்சைக்குப் படிக்கும் மாணுக்கர்களுக்கு ஆங்கிலேய தத்துவசாஸ்திரம் (English Philosophy) பாடமிருந்தும் அவைகளில் அநேகம் நாஸ்திகமாயும் சில ஆஸ்திகமாயு மிருக்கின்றன. பி-ஏ. பரிட்சைவரைக்கும் படிக்கும் மாணுக்கர்கள் மிகச்சிலர். அவர்களில் ஆங்கிலேய தத்துவசாஸ்திரத்தைப் படிப்பவர் இன்னும் மிகச் சிலரே. இவர்களிலும் அநேகருக்கு பாலியத்தில் ஈசுவரசம்பந்தமான நூல்களை படித்திலாததால் ஆங்கிலேயதத்துவ சாஸ்திரத்தைப் படிக்குங் காலத்து அதில் நிரீசுவரவாதமாய்ச் சொல்லப்பட்ட பாகமே மிகவும் திருப்திகரமாயிருக்கிறது. "தெய்வமென்று ஒன்றிருக்கவேண்டிய அவசியமில்லை. கண்காட்சியாயிருக்கும் ஐம்பூதச் சேர்க்கையின் பரிமாண விசேஷத்தால் பலவித சிருஷ்டிகள் உண்டாகி அப்பரிமாண நெகிழ்ச்சியின் குறைவால் சிருஷ்டியான வஸ்துக்கள் தாமே அழிகின்றன. இதற்கோர் தெய்வம் கற்பிப்பது அனாவசியமே" என்று அநேகர் வாதஞ்செய்யத் தொடங்குகிறார்கள்.

அக்ஷராப்பியாசந் தொடங்குங் காலமுதல் கடவுள் ஞானத்தையும் அவரிடத்துப் பக்தியையும் உண்டாக்கச்செய்வது நமது சுதேசபாஷை. இப்பாஷையைப் படிக்க வாரம்பிக்கும்போது சிறுபிள்ளைகளுக்கு நம்மவர் சொல்லிவைப்பது பகவானுடைய நாமமே. அக்ஷரங்களைச்சேர்த்துப் படிக்குந்திறமை வந்தவுடன் நமது தமிழ் சிறுவர்களுக்கு உபயோக மாகும்படியான ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், முதலான சிறிய நூல்களில் பகவானை நேசிக்கவேண்டுமென்றும் அதற்காக சன்மார்க்கத்தை யனுசரிக்க வேண்டுமென்றுங் கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் சிறிது படிப்பு விர்த்தியாக, நன்னெறி, நல்வழி, நீதிவெண்பா, பழமொழி முதலான சிலாக்கியமான நூல்கள் தெய்வபக்தியை விர்த்திசெய்வதுடன் அதற்குவேண்டிய நல்லாசாரங்களை அநுஷ்டிக்கச்செய்யும் வலியுள்ளனவாயிருக்கின்றன. இப்படியே இதர சுதேசபாஷைகளிலு மிருக்கின்றன. அதிக் விருப்பத்துடனும் ஊக்கத்துடனும் நமது சிறுவர்கள் படிக்கும் ஆங்கிலேயபாஷையில் இத்தகைய நூல்களில்லை. நமது சுதேசபாஷாக் கிரந்தங்களில் எதை எடுத்துப்பார்த்தாலும் ஆரம்பத்தில் தெய்வவணக்கம் கூறாத நூலில்லை. இதனால் நமது கிரந்தங்களை எடுத்துப் படிக்கும்போது நமது சிறுவர்களுக்கு முதலில் ஈசுவரனுடைய ஞாபகமே உண்டாவதற்குக் காரணமிருக்கிறது. இம்மாதிரி ஆங்கிலேய பாஷையிலில்லை. தெய்வபக்தியும் நல்லநுஷ்டானமும் உண்டாக்கவல்ல நமது சுதேசபாஷை தற்காலத்தில் பரிக்ஷைக்குப் பாடமிருந்தும் நமது சிறுவர்கள் சொந்தபாஷையைக் கவனிப்பதில்லை. ஆங்கிலேயபாஷை நூதனபாஷை யானதால் கஷ்டமாயிருந்தபோதிலும் அதைத்தான் அதிக ஊக்கத்துடன் நமது சிறுவர்கள் படிக்கிறார்கள். சுதேசபாஷையோ பால்லியமுதல் வீட்டில்பேசும் பாஷையாயிருப்பதால் எளிதாயிருந்தும் நம் சிறுவர்கள் அதை படிப்பதேயில்லை. இதற்கு என்னகாரணம்? நூதனபாஷையானதால் ஆங்கிலேயபாஷையைப் படிப்பதற்கு அதிககாலம் வேண்டும். இத்துடன் கணிதம் சரித்திரம் பூகோளம் இவைகளையும் ஆங்கிலேயத்திலேயே கற்கவேண்டியிருப்பதால் நமது சிறுவர்களுக்கு அதிககாலம் செலவாகி விடுகிறது. ஒருநாளைக்கு ஐந்துமணிநேரம் ஆங்கிலேயபாஷைக்கும் ஒருமணிநேரம் சுதேசபாஷைக்கும் பள்ளிக்கூடத்தில் காலம் ஏற்பட்டிருந்தும் ஒருமணிநேரம் நடத்தப்படும் சுதேசபாஷையை நமது சிறுவர்கள் சொந்தபாஷைதானே என்று ஆலட்சியஞ்செய்து விடுகிறார்கள். இவ்வாறுபடித்து நமது சிறுவர்களுக்குக் கொஞ்சம்வயது ஏற ஆங்கிலேயபாஷையை நன்றாய்ப் படித்தால்தான் உத்தியோகஞ்செய்து பிழைக்கலாம். சுதேசபாஷையை கற்பதால் இலாபமில்லையென அறிகிறார்கள். வயிறு பிழைப்பதற்கே படிக்கவேண்டியது அவசியமெனவும் எண்ணுகிறார்கள். உதாரணமாக ஆங்கிலேயபாஷையில் மெட்ரிகுலேஷன் பரிக்ஷை தேரியவர்கள் உத்தியோகஞ்செய்து மாதம் ஒன்றுக்கு ரூபாய் 40 அல்லது 50 சம்பாதிப்பதையும் இன்னும் மேன்மேலும் விர்த்தியாகி அதிக சம்பளம்பெற யோக்

இயதை யுடையவர்களா யிருப்பதையும் நமது சிறுவர்கள் காண்கிறார்கள். சுதேசபாஷை ஒன்றைமாத்திரம் அநேகவருஷம் படித்து வித்துவான்களாகி நன்றாய்ப் போதிக்கும் சக்தியையும் பெற்றவர்களில் அநேகர் கல்விச்சாலை ஒன்றையே தாங்கள் பிழைக்கும் உத்தியோகஸ்தலமாக வைத்துக்கொண்டு பண்டிட், அல்லது முனிஷி என்னும் பட்டம்பெற்று 10 ரூபாய் சம்பளத்தில் ஆரம்பித்து அதிகநாள் உழைத்து கடைசியாக ரூபாய்-20 அதிக சம்பளம்பெற்று வருவதையும் நமது சிறுவர்கள் காண்கிறார்கள். இந்தக்காரணங்களால் சுதேசபாஷையினிடத்தில் நம்மவர்களுக்கு விருப்பமில்லை.

வயிறு பிழைப்பதற்கல்ல படிப்பது ஞானத்தை யடைய படிக்கவேண்டியதென்னுங் கருத்துடையவர்களுண்டாயின் அவர்கள் ஆங்கிலேயபாஷையைப் படிப்பதுபோலவே சுதேசபாஷையையும் படிப்பார்கள். தற்காலச்சிறப்பு, இராஜாங்க விஷயங்கள், பலதேச வர்த்தமானங்கள், லௌகீகவிஷயங்கள் முதலானவைகளை யறிவதற்கு ஆங்கிலேயபாஷை அவசியம் வேண்டும். ஈசுவரஞானம், அதை யடைவதற்கு ஏற்பட்ட ஆசார அநுஷ்டானங்கள் முதலானவைகளை அடைந்து பரலோக சாதனமாயுள்ளவைகளை யறிவதற்குச் சுதேசபாஷை அவசியம் வேண்டும். ஒருமனிதன் லௌகீக வைதீக அல்லது வியவகாரிக, பரமார்த்திக விஷயங்களிரண்டையும் அறியவேண்டும். லௌகீகம் அல்லது வியவகாரிகமென்பது உலகசம்பந்தமானது. இதுகாலத்தையும் தேசத்தையும் அநுசரித்து தேகபோஷணைக்காக உழைக்கச்செய்வது. ஆகையால் காலத்தை யநுசரித்து ஆங்கிலேயபாஷை கற்பதும், பல வியாபாரங்களைச் செய்வதும் லௌகீகமெனச் சொல்லலாம். பரமார்த்திகம் என்பது எக்காலம் எத்தேசம் எப்படியிருந்தபோதிலும் தன்னை யறிந்து தனக்கு மேம்பட்ட கடவுளையறிந்து தன் ஆத்மபோஷணைக்காக உழைக்கச் செய்வது. ஆகையால் எவ்வித்தை கற்றாலும் எத்தொழிலைச்செய்தாலும் பகவானையறிவித்து அவனிடத்துப் பக்தியை விர்த்தி செய்விக்கும்படியான நமது சுதேசபாஷைக் கிரந்தங்களைப்படிப்பதும் நமது ஆசார அநுஷ்டானங்களை விடாதிருப்பதும் பரமார்த்திகமெனச் சொல்லலாம்.

ஆரிய நேயர்களே! இலௌகிக பரமார்த்திக விஷயங்களில் எது மேம்பட்டதோ அதை நீங்களே யறியலாம். மேம்பட்டதை விர்த்திசெய்யும் பாஷை எதுவோ அந்த நீங்கள் விர்த்திசெய்யவேண்டும். சுதேசபாஷை விர்த்தியடையுமாயின் தெய்வபக்தி விர்த்தியாகும். ஆசார அநுஷ்டானங்களும் நிலைபெற்று நிற்கும்.

சுதேசபாஷாபிமானி

## அருமையான விஷயங்கள்.

தண்ணீரையே காரணமாக வைத்துக்கொண்டு உற்பவித்த தாமரையானது எப்படி தண்ணீரில் பற்றாதிருக்கின்றதோ, அவ்வண்ணமே வினையே காரணமாக ஜன்மமெடுத்து வினையின்பயனை யனுபவிக்குங்காலத்து அதில்மனம் பற்றாது அவ்வநுபவத்தை சாக்ஷிபோல் பார்ப்பதுதான் துன்பத்தையடையாம லிருப்பதற்கு நல்லசாதனம்.

* * *

சேற்றுநீர்போல அகங்கார மமகாரங்களால் ஆவரிக்கபட்டது சீவன். தேற்றாங்கொட்டையின் நுண்ணிய பொடிகள் சேற்றோடுசேர்ந்த நீரைத்தெளிவிக்கிறது. அதுபோல ஞானமும் அகங்கார மமகாரங்களை நீக்கி சீவனை சுத்தாத்துமாவாக்குகிறது. எப்படித் தேற்றாங்கொட்டைப் பொடிகள் தங்கள் உருவந்தோன்றாதபடி சேற்றுநீரிலே கலந்துபோமோ அப்படியே ஞானமும் ஆத்மாவினிடத்திலே லயமாய்ப்போம்.

* * *

சுவச்சமான சுவர்ணத்தினால் செய்யப்பட்ட கடக குண்டலாதி ஆபரணங்கள் அச்சுவர்ணத்தைக்காட்டிலும் எப்படி அன்னியமாக மாட்டாவோ அப்படியே சச்சிதானந்த சொரூபமாய் சர்வவியாபகமாயுள்ள பிரமத்தில் கற்பிக்கப்பட்ட சராசரரூபமாகிய பிரபஞ்சமெல்லாம் அப்பிரமத்தைக்காட்டிலும் அன்னியமாக மாட்டா.

* * *

இருட்டிலுள்ள பதார்த்தத்தைப் பார்ப்பதற்கு தீபத்தின் உதவிவேண்டும். பிரகாசிக்கின்ற தீபத்தைப் பார்ப்பதற்கு மற்றொருதீபம் வேண்டியதில்லை. அதுபோலவே அஞ்ஞானத்தைக் காரணமாகவுடைய உலகத்தையறிய ஞானம்வேண்டும். சதாஞானஸ்வரூபியாய் எல்லாருடைய இருதயகமலத்தில் பிரகாசிக்கின்ற பரமாத்துமாவை அறிகிறதற்கு மற்றோர்ஞானம் வேண்டியதில்லை.

* * *

இதுகிழக்கு இதுமேற்கு என்று தெரியாத திக்கு பிரமையானது சூரியோதயத்தால் நீங்குவதுபோல், நான்யார்? உலகமெவ்வண்ணம்? ஈசுவரன்யார்? என்னும் பிரமையானது தத்துவஸ்வரூபாநுபவத்திலே ஜனித்த ஞானத்தால் நிவர்த்தியாகும்.

* * *

சங்கற்பத்தினா லுண்டாகிற சகலமான விஷய ஆசைகளை முற்றிலும் விட்டு, மனதினாலேயே சகல

மான இந்திரியங்களைச் சகல விஷயங்களினின்றுந் திருப்பி, தைரியத்தினால் சுவாதீனஞ் செய்துக்கொள்ளப்பட்ட புத்தியினாலே மனதை ஆத்மாவிடத்தி லிருக்கும்படி செய்து, மெள்ள மெள்ள மனதை வசியப்படுத்த வேண்டும். இதுதான் எப்போதும் யோகிகள் செய்யுந் தொழில்.

* * *

எந்தப்பிராணிக்கும் ஹிம்சை யுண்டுபண்ணாதவனும் எல்லாருக்கும் மித்திரனும், கருணையுள்ளவனும், அகங்கார மமகாரம் சிறிது மில்லாதவனும், சுகதுக்கங்களைச் சமமா யெண்ணுகிறவனும், பொறுமையுள்ளவனும், எப்போதும் சந்துஷ்டனும், மனதையடக்கும் முயற்சியுள்ளவனும், பகவானிடத்தே மனம் புத்தி இவைகளை அர்ப்பிதம் பண்ணவனும் எந்த மனிதனிருக்கிறானோ அவன்தான் பக்தன். அவனே பகவானுடைய பிரியத்தை யடைகிறான். அவன்தான் பக்திமார்க்கத்தை நன்றாய் அறிந்தவன்.

* * *

எவனிடத்திலிருந்து பிராணிகள் பயமடைகிறதில்லையோ, எவன் பிராணிகளிடத்திலிருந்து பயமடைகிறதில்லையோ அவன்தான் ஆத்ம தத்துவத்தையறிந்த நற்பக்தன்.

* * *

சத்துருவினிடத்தும் சினேகிதனிடத்தும், மானத்திலும் அவமானத்திலும், சீதத்திலும் உஷ்ணத்திலும், சுகத்திலும் துக்கத்திலும் சமமாயிருப்பவனும், வெளிக்கு நடிக்காமல் உண்மையில் ஒன்றிலும் மனம் பற்றாதவனும், ஒருவர் நிந்தித்தாலும், மற்றொருவர் ஸ்தோத்திரஞ்செய்தாலும், அவைகளில் சமமாயிருப்பவனும், எப்போதும் மௌனம் வகித்தவனும், கிடைத்ததில் சந்தோஷமடைந்து கிடையாத விஷயத்தில் ஆசை கொள்ளாதவனும், எப்போதும் ஸ்திரமானபுத்தியுடனிருப்பவனுமானவன் எந்த மனிதனோ அவன்தான் பகவானுக்குப் பிரியனாகிறான். அவனே பக்தன். அவனே சீவன் முக்தன்.

* * *

ஜீவன் முக்தனான யோகியானவன் அவித்தையாகிய சமுத்திரத்தைப் பிரமாபின்னமான ஞானமாகிய தெப்பத்தினாற் கடந்து மோக்ஷத்திற்குச் சத்துருக்களாகிய ராகத்துவேஷாதிகளென்னும் இராக்ஷசர்களை முற்றும் நாசஞ்செய்து உத்தமசாந்தியோடு கூடி தன்னிடத்தில் தானே ஆனந்தம் அடைந்து விளங்குகிறான்.

* * *

ஜீவன் முக்தனான யோகியானவன் சகல வுபாதிகளிலுங் கூடியிருந்தாலும், ஆகாசம்போல ஒன்றோடும் சம்பந்தப்படாதவனும், சமஸ்தத்தையும் அறிந்திருந்தாலும் மூடன்போல ஒன்றையும் அறியாதவனும், பிராரப்தகர்மத்தினால் பிரயத்தனமின்றி நேரிட்ட போகங்களிலும் விருப்பமில்லாமல் காற்றுப்போல சஞ்சரிப்பான்.

* * *

நெருப்பானது புகையினாலேயும் கண்ணாடி அழுக்கினாலேயும், வயிற்றிலிருக்கிற சிசுவானது கருப்பையினாலேயும் எப்படி மூடப்பட்டிருக்கிறதோ அப்படியே மனிதனுடைய ஞானமானது ஆசையினால் மூடப்பட்டிருக்கிறது. ஆசையை யொழித்தாலல்லாமல் ஆத்மஞானம் கிடைக்காது.

* * *

ஆசையையொழித்து மனதின் ஓட்டத்தையடக்கி ஆத்மஞானத்தையடைய முயற்சிசெய்வதுதான் எல்லா யக்ஞங்களிலும் உயர்ந்த யக்ஞமென்று கூறப்படுகிறது. சில யோகிகள் சப்தம் முதலிய விஷயங்களை இந்திரியங்களாகிய அக்னியில் ஓமஞ்செய்கிறார்கள். அதாவது இந்திரியங்களுக்கு விஷயானுபவங்களைக் கொடாமல் தடுப்பது. இது ஓர்யக்ஞம். சிலயோகிகள் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை ஆத்மஞானத்தில் மனதை நிறுத்தலாகிய யோகமென்கிற அக்கினியில் ஓமஞ்செய்கிறார்கள். அதாவது விஷயங்களைத் தேடியோடும் இந்திரியங்களின்வழியே மனதை செல்லவிடாமல், தான் எதனிடத்திலிருந்துண்டாய் எதை ஆசரியித்து சகல வியாபாரங்களையும் செய்கிறதோ அதையறிய மனதை அகமுகமாய்த்திருப்பி ஆத்மாவினிடத்தே லயித்திருக்க செய்வது. இதுதான் எல்லாவற்றிற்கும் மேலானயக்ஞம்.

* * *

மனது ஒருவனுக்கு சுவாதீனமாகும் வரையில் பெரியோர்களால் ஏற்படுத்தப்பட்ட மதானுஷ்டானம் சித்தித்ததாக நினைக்கப்படாது-எவ்வளவுவிஷயங்களைக் கற்றாலும், கற்றதைப்பேசினாலும் ஒரு பிரயோசனமுமில்லை. "மனமிறக்கக்கல்லார்க்குவாயேன் பராபரமே" என்று தாயுமானாருங் கூறினர். மனதையடக்கும் நிமித்தம் முதலில் உலகவிஷயங்களையெல்லாம் வெறுக்க வேண்டியதாயிருக்கிறது. உலகவிஷயங்களில் வெறுப்பைக்காட்டி மனதையடக்கி ஆத்மஞானத்திலே நிலைத்திருக்கப் பழகியபின் உலகவிஷயங்களின் உண்மை ஞானம் வருகிறது. அக்காலத்து உலகவிஷயங்களில் வெறுப்புமிராது விருப்புமிராது, உலக ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆரம்பத்தில் உலகத்தினிடத்திருக்கும் விருப்பத்தையொழிக்க வெறுப்பைக் கொள்ளவேண்டும். உலகத்தை வெறுத்தபின்னரே ஆத்மஞானம் வருகிறது. ஆத்மஞானம்வந்து உலகத்தின்

உண்மைவிளங்கியபின் உலகத்தினிடத்துள்ள வெறுப்பும் விட்டுப்போகிறது. விருப்பு வெறுப்பற்றபோது தான் நிலைத்தஞானம் வந்ததற்கு அடையாளம். விருப்பு வெறுப்பு அற்றுப்போகிறவரைக்கும் மனிதனுக்கு சன்மங்கள் வந்துகொண்டேயிருக்கும். இதனால்தான், "வேண்டாம் விருப்பும் வெறுப்பும் - அந்த வில்லங்கத்தாலே விளையுஞ்சனனம், ஆண்டா னுரைத்தபடியே- சற்று மசையாதிருந்து கொள்ளறிவாகி நெஞ்சே." என்று மகா அனுபோகியான தாயுமானார் தயையுடன் கூறியருளினார்.

## அறச்சிறப்பு.

உலகின்கண் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட அநேக ஜீவராசிகளிலும் ஜடராசிகளிலும் மனித ஜன்மமே சிரேஷ்டமும் கிடைத்தற்கு அருமையுமானது. எவ்வளவோ புண்ணியங்களைச் செய்திருந்தா லல்லாமல் பகுத்தறிவுள்ள மனிதஜன்மம் கிடைக்காது. பகுத்தறிவுள்ள மனிதனாய்ப் பிறந்தும் தன்னைப் பகுத்தறியாமல் காலத்தை வீணில் கழிப்பதில் என்ன பயன்! ஓர் ஊருக்குப்போக அநேகவழிகளிருப்பதுபோல பகவானைச் சேருவதற்கு அநேகமார்க்கங்களிருக்கின்றன. மனிதர் அவரவர்கள் மனப்பரிபாக முதிர்ச்சிக்குத்தக்கபடி அவரவர்கள் ஓர் வழியிற்புகுந்து பகவானைச் சேருகிறார்கள். உதாரணமாக ஒருவன் ஓர் கல்லை பகவானாக நினைத்து அதை நிஜமான பக்தியுடன் தொழுது பகவானைக்காண்கிறான். இன்னொருவன் வேதசாஸ்திரங்களைக் கற்று அதன்மூலமாய் பகவானை அறிகிறான். மற்றொருவன் அதிக அன்பையும் பக்தியும் பகவானிடத்தில் செலுத்தி அவன் காண்கிறவஸ்துவெல்லாம் ஈசுவர சுவரூபமாகவே காண்கிறான். இப்படி அவரவர்கள் புத்திக்குத் தக்கவாறு அவரவர்கள் ஓர் வழியைக் கடைப்பிடித்து பகவானை அறிய நிற்கையில் அப்பகவானும் அவரவர்கள் தன்னை எப்படி நினைக்கிறார்களோ அப்படியே தோன்றுகிறான். ஈசுவரனையடைய பல வழிகளுள் அறம் ஒன்று. உலகத்தில் பூர்வஜன்மாந்தரத்தில் செய்த புண்ணியத்தினால் சிலர் அதிக செல்வர்களாய்ப் பிறந்து நல்ல சுகத்தை யனுபவிக்கிறார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் அறம் செய்யாது பணத்தைப் பத்திரமாய் பெட்டியில்போட்டு அதற்கு காவலாய் அதன்பக்கத்திலேயே படுத்து வேறொரு விஷயத்தையும் அறியாமல் சதாபணப் பயித்தியம்பிடித்து பகவானை விசாரியாது காலத்தைக் கழிப்பதில் யாதுபயன்? தருமமென்பது இம்மை மறுமைப் பயன்களை எளிதிற்றருவது. அது கஷ்டசாத்தியமாக வரும்பொருள், சத்தியவான்களே அறிவது ஏனையர் அறியலாகாதது. மேலும் ஒருவன் தருமத்தை அனுசரித்தால் அன்புதானே வந்து அடையும். அன்புவந்தடைந்தவிடத்து அருளும் பிறக்கும். அவை தோன்றியவிடத்துத் தவம் பலிக்கும், அதற்குமேல் ஆன்மா ஈசுவரசாமீப்பியத்தை அடையும். அறமானது தெய்வபோகம்-மோக்ஷம் - பூலோகச் செல்வம் என்பனவற்றைத் தருதலால் அதனைத் தினந்தோறும் விருப்பத்துடனே மனமொழி மெய்களாலே ஒருவன் செய்யவேண்டும். அறமானது பொருள், இன்பம், வீடு என்னும் மூன்றனையும் தருவதாயின் ஒருவருக்கு இகபரசாதனமாவது அறமேயன்றி வேறொன்றில்லை. கிடைத்தற்கரிய மனித சரீரத்தைப்பெற்றவிடத்து அதன் உதவியினாலே செய்யத்தகுந்த அறங்களைச்செய்து ஜன்மபந்தத்தை ஒழிக்க வழிதேடாமல் உழல்பவன் பெற்ற உடலானது பொற்கலத்தில் பெய்தற்குரிய பாலை மட்கமரில் பெய்ததுபோல் பயனற்றதாகும் என்பர் பெரியோர். மின்னல்போல் நிலையற்றதான சரீரத்தைக்கொண்டு நல்லறஞ்செய்து அழியாத தேவ சரீரத்தையும் இன்பத்தையும் அடைதலாக இருப்ப அதைச்செய்யாது கைவிட்டு வீணே உண்டு உயிர்வாழும் மாந்தர்களினால் என்ன பயன்? கோடைகாற்றடிக்கையில் முற்றினபழங்கள் உதிராதிருக்கவும் முற்றாதகாய்கள் உதிர்வதுபோல, விருத்தர் பிழைத்திருக்கவும் வாலிபர் இறத்தலுமுண்டு. ஆகையால் இப்பொழுது இளம்பிராயந்தானே, ஈதலாகிய தருமத்தைச் செய்யாமல், ஆராய்ந்து செய்யலாமென்றிராமல் கையில் பொருளுண்டான விடத்தே ஒளிக்காமல் சீக்கிரமாக தருமத்தைச்செய்யவேண்டும். மேலும் நாம் இன்னாளில் இறப்போம் என்பது தெரியாவிடினும் எப்படியும் ஒருநாளில் இறப்பது திண்ணமாதலால்கூடிய மட்டில் நல்ல தருமங்களைச் செய்யவேண்டும். நமது அரிய உயிர்போன்ற மனைவிமக்களுக்கு ஆகுமென்று பொருள் தேடிவைத்தும் அவர்கள் நமக்கு முன்னே இறந்துபோவதையுங் காண்கிறோம். இதைக்கண்டும் தருமஞ்செய்வதற்குச் சாதனமான உடலைப்பெற்றும் தருமத்தைச் செய்யாமல் சிலர் வாணாளை வீணாளாகக் கழிக்கின்றனரே, இவருடைய பேதைமை இரங்கத்தக்கதாக இருக்கின்றது. அன்றியும் சிலர் இல்வாழ்க்கையில் குறைக்காரியங்களை முடித்தபின்னர் துறவறத்தை குறித்துச் செய்வனவற்றைச் செய்துகொள்ளலாம் என்று நினைக்கும் பேதைமையானது சமுத்திரஸ்நானம் பண்ணப்போனவர்கள் சமுத்திரகோஷ மடங்கினபிற்பாடு ஸ்நானம் பண்ணலாமென்று காத்திருந்தவர்களுடைய பேதைமைக்கு நிகராகும். ஒருவன் இறக்குங்காலத்து அவன் உயிர்க்கு அழியாததுணை அறமேயாதலால் அதனை இறக்குங்காலத்தில் செய்வோம்

என நினையாமல் தினந்தோரும் செய்துவரவேண்டும். அறமானது மனிதருயிருக்கு மோக்ஷம் சுவர்க்கம் முதலினவற்றைத் தருதலால் அவ்வுயிர்க்கட்கு அதனைக்காட்டிலும் மேலான ஆக்கந்தருவது வேறு என்ன விருக்கின்றது? ஒன்று மில்லை. கடைசியாக அறமாகிய கற்பகவிருக்ஷம் பொருளும் போகமுமாகிய பூக்களைப் பூத்தலால் எவ்விதத்தில் வருந்தினீராயினும் அறத்தை மறவாமற் செய்மின்.

## ஜாதிதருமம்.

பரிசுத்தமாகிய பிராமணுள் வருணுசிரமமென்று சொல்லப்பட்ட நான்கு ஜாதிக்கும் முதற்குலத்தோர். அப்பிராமணுள் செய்யவேண்டிய கிரமங்கள் யாவை என்ருல், வேதியரென்போர் குற்றஞ் செய்யாமலும், கோபம்வையாமலும், சத்தியந்தப்பாமலும், ஆசையில்லாமலும், தருமம் மறவாமலும் பூத தயையுடன் பதிவிரதையாகிய பெண்ணைக் கலியாணஞ்செய்து சுசி ஆசாரத்துடன் நித்திய சபதபகரும காயத்திரிமுதலிய காரியங்களில் வழுவில்லாமல் வழியாய் நடத்துவது பிராமண விதி. இன்னமும் வேதமோதல், யாகஞ் செய்தல், வேதமோதிவித்தல், யாகம் பண்ணுவித்தல், தபசு செய்தல், தெய்வத்தைப் போற்றல், அவுபாசனம் புரிதல், அக்கினிசாக்ஷியாய் கலியாணஞ்செய்தல், அரசருக்கு விவாகம் நடத்திவைத்தல், அரசர்முதலிய எவர்கள் கொடுத்தாலும் தானம் ஏற்றல், தான மீதல், அதிதிக்கு அன்னம் படைத்தல் இத்தியாதி குணங்களும் உடையவன் பிராமணன். இவர்கட்கு நீரின் முன் ஜபமும் நெருப்பின் முன் தவமும் முக்கியமானது.

க்ஷத்திரியனனவன் அவயவங்குறையாதவனும் அழகுடையவனும் குலகோத்திர மேன்மை பெற்றவனும் பிராமணுளேக்கொண்டு எக்கியம் செய்துவைத்து வில்வித்தை, யானை, ரதம், குதிரை, தேர், கத்தி கேடயம் இவை முதலியவை பழகி நால்வகைச்சேனைகளைக் காப்பாற்றி சத்துருவின்பேரில் சண்டைக்குப்போய் ஜயம் பெற்று மன்னுயிரைத் தன்னுயிர்போல்மதித்து பொதுவாயிருந்து திரவியஞ்சேர்த்து பரதேசி முதலிய யாசகர்களுக்குக்கொடுத்து பக்ஷபாதமில்லாமல் பரராஜ பயங்கரனுயிருந்து அரசாள்வது முக்கியதருமம்.

தருமந்தப்பாமல் திரவியஞ் சம்பாதித்து உழவு வாணிபஞ்செய்து பசுவினங்காத்து நாணயமில்லாரிடத்து கொடுக்கல் வாங்கல் செய்யாதிருந்து பொய்பேசாமல் பரதாரம் விரும்பாமல் சத்தியவழியில் நின்று புண்ணியம்தேடி பிராமணப் பூசைபுரிந்து அன்னதானமிட்டு தெய்வாராதனை நோன்பு சுப சோபனுதிகளில் பொருள் செலவழித்து பூரணமாக முடித்துக் கோபத்தையடக்கி பொருமையுடனிருந்து வாழ்வது வைசிய தருமமாம்.

மேற்கூறிய பிராமண க்ஷத்திரிய வைசிய ரென்னும் மூன்றுசாதிக்கும் உபகாரம்பண்ணி உழுது பயிரிட்டு தன்னுசிரியன், தரித்திரன், பிதுர்க்கள், பால்யர் சகலமான பேருக்கும் உதவிசெய்து தேவதா பக்தி, ஆசாரிய பக்தி, பெரியாரைப் பணிதல், பசுக்காத்தல் இவைமுதலிய வேலைகளில் ஆளாகியிருப்பது சூத்திர தருமம்.

## நான்காசிரமம்.

பிர்மசரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்று நான்காசிரமம். இதில் பிர்மசாரிநடக்கவேண்டிய முறைமைகளாவது குருவணக்கம், வேதாகமப் பயிற்சி, செபம், தவம், தர்ப்பை சமித்து புஷ்பம் முதலானவை கொண்டு ஆசாரியருக்கு உபயோகப்படுத்தல், சந்தன சுகந்த பரிமள தயிலம் விலக்கல், சிவகாருண்யமா யிருத்தல் இவை முதலியவைக ளெல்லாம் முதலாச்சிரமமாகிய பிரமசாரியின் செய்கை.

இல்லறம் இரண்டாவது ஆசிரமம்:- நாணம், மடம், அச்சம், பயிற்பு என்னும் நான்கு குணங்களையுடைய கற்புடைமை வாய்ந்த நற்குண நற்செய்கை தோய்ந்த பதிவிரதையை விவாகம் செய்துக்கொண்டு அவளை விட்டு வேறுவழியிற் புகாமல் அவளுடன் கூடிவாழ்ந்து தாய்தந்தையரைப் பூசித்து, கிழவர்கள் பாலர்கள் நோயினர் இவர்களை ஆதரித்து அதிதி பிதுர்தேவதை முதலிய பேருக்கு விருந்தமுதூட்டி ஜீவயிம்சை செய்யாமல் பிறருடைய பாரியைபேரில் ஆசைப்படாமல் பரதேசிகளுக்கு பிச்சையிட்டு சுற்றத்தாரை நிந்தனைசொல்லாது பாதுகாத்து தேவதா பூஜை புரிந்து நோன்புகளை அனுஷ்டித்து தர்ப்பணுதிகள் செய்து தேவாபத்தி பந்து ஜன நேசம் சுபசோபன சந்தோஷங்களுடன் இருக்கவேண்டியவன் கிருகஸ்தன்.

வானப்பிரஸ்தம் மூன்ருவது ஆசிரமம்:— வானப்பிரஸ்தன் அக்கினியுடனேயும் பெண்சாதியுடனேயும் காட்டிற்குப்போய் புனிதமாக ஆசிரமங்கட்டிக்கொண்டு போசனத்தையொழித்து காய், இலை, சரகு, கனி, முதலியவற்றைப் புசித்து வீண்காலம் போக்காமல் பிரம நிஷ்டை கூடி காற்றுக்கும் பனிக்கும் மழைக்கும் பயப்படாமலிருந்து தபசுபண்ணுகிறது மன்றி தன்னை இழுத்துச் செல்லும் ஐம்புலன்களையும் அடக்கி தன்வசப்படுத்தி கர்மபூமியின் வாசன விஷயத்தைக் கனவிலுங் கருதாமலிருப்பது மூன்ருவது ஆசிரமத்தின் முறை.

நான்காவது சந்நியாசம்:— அதாவது சகலமும்
நாசம். பாசபந்தமறுத்தல், ஓரிடத்திலிருக்காமல் உலக
மெல்லாஞ் சஞ்சரித்தல், கிடைத்தபோது உண்ணுதல்,
படுக்கை உடுக்கை உண்டல், முதலியவைகளை பக்குவ
ருசிபாராமல் அனுபவித்தல், ஒருவருடன் பேசாமல்
மௌனமா யிருத்தல், நல்லதென்றும் தீயதென்றும்
நாடாதிருத்தல், சிகை பூணூல் இவைகளைச்சார்ந்த கரு
மக்கிரியைகளை நீக்கல்,காவிகாம்பரம் போர்த்தல்,தண்டு
கமண்டல மேற்றல், வேதசாஸ்திர புராண முதலிய
நூலெல்லாம் ஐயம் திரிபற அறிதல், சகலமும் பிர்ம
மார்ப்பணம் செய்தல், நான் எனது என்னும் செருக்கு
அழிதல், பொருமையாதல், விருப்பு வெறுப்பு விட்டு
விடுதல் முதலிய இத்தியாதி நடவடிக்கைகளை யுடைய
வர்களை யதிகளென்றும் சொல்லலாம்.

## மோக்ஷநிலை.

ஒருவன் இல்லறநீங்கித் துறவறந்தாங்கி நாட்டை
விட்டுக் காட்டிற்போய்த் தவமிழைப்பதே கடைப்பிடி
யான தருமம். இத்தருமம் வகித்தவன் பொருள்-பெண்
டு-பிள்ளை-மண்-மனை இவைகளை நினையாமல் நல்வினை
தீவினைகளில் மயங்காமல், நடுக்கமில்லாமல் மழை
வெய்யில்களுக்குத் தியங்காமல், கல், கறடு, புல், பூடு,
இவைகளுக்கு இடையாமல், பஞ்சேந்திரியவாதைகளை
நிக்கிரகித்து, அறுவகைப் பகையையு மொழித்துதா
னென்கிற ஆணவமலத்தை யறுத்து, உடலபிமானம்
விட்டு, மரவுரி உடுத்தி, பெரிய மகானுபாவரை விரு
ம்பி யோகத்திலோங்கி, விதிவிலக்கை யனுசரித்து
வெறுப்பும் விருப்புமில்லாம லிருப்பவன். பிறவாதவன்
இறவாதவன். இதற்கு மேற்பட்ட தருமமில்லை. மற்ற
வைகளெல்லாம் இத்துறவுக்குச் சரியானதல்ல. எல்லாம்
பந்த சம்பந்தங்களாம். அப்பந்த சம்பந்தத்தி னியல்
பென்ன வெனில்? பணம் பணமென்று நினைத்துக்கொ
ண்டு எத்தனைபாவங்களானாலுஞ் செய்து பொருளைச்
சம்பாதிப்பதும், அந்தப்பொருளை போஷிப்பதும் அப்
பொருள் கெட்டுப்போவதுமாம். இத்தியாதி விதங்களி
லெல்லாந் துன்பமே. எப்போது பணத்தாசைவிடுமோ
அப்போதே விசனம்விடும், இப்பொருளாசையினும்
பிள்ளையாசை பெரிது. பிள்ளையில்லாமற் போனாலோ
மெத்தவும் பிராந்தி. பிள்ளை கிடைத்தாலோ அதனால்
வேண்டிய துக்கம். முடிவில் யோசிக்குமிடத்தில் இவ
னார்? பிள்ளையார்? இது சிருஷ்டியினுடைய சுபாவம்.
பிள்ளை வேண்டுவோர்க்குப் பிறக்காமையும் வேண்டா
தார்க்கு வெகுவாயுண்டாதலு மாகின்றன. பெண்சாதி
பிள்ளை யென்பவர்களில் முற்பிறப்பில் யாருக்கார் சொந்
தபந்தம்? இப்பிறவியாகிய சந்தையில் கூடிய கூட்டம்.
சுக்கிலம்-சுரோணிதம் - எலும்பு-தோல்-நரம்பு-மாம்சம்-
நிணம்-ரோமம் இவைகள் சேர்ந்தால் ஒருதேகம். காற்று
நின்றுலாவி யசைக்குங்காயம், வாயு நீங்கினால் வல்லு
டற்றூங்கும். ஒரு மரத்தில் தளிர்த்தது கொழுந்து,
அப்பால் இலை, பின்பு பழுப்பு, அதன்மேல் உதிர்த்த
உலர்ந்தசரகு; இந்த ஆக்கையுங் குழந்தை - பாலன் -
பையன்-குமரன் - நாயகன் - வயோதிகன் என்னும் பரு
வங்களை வகித்துக்கொண்டு வளர்ந்து வாழ்நாள் நீங்கி
னால் மாளத்தக்கதே. ஆனதால் கானல் நீர்போன்றது
காயம். இஃது நல்வினை தீவினைகட் கீடாயெடுப்பது.
அவ்வினைகளொழிந்தால் தோன்றிமறையு மின்னலைப்
போலாகும்.

இப்படிப்பட்ட பொய்யுடலை மெய்யென்றுநம்பிய
ஒருவனுக்கு மோக்ஷம் எங்ஙனம் கிடைக்கும்? சத்தை
விட்டு அசத்தைதொட்டு மயங்கி நலம் குலைந்துபோ
வான், பின்னை யெப்போதுதான் கடைத்தேருவானென்
றால் பிரபஞ்ச மாயாமயக்க மித்தையென்று உணர்ந்து
ஈஸ்வரபக்தி பிறந்து ஞானம்சிரந்தநாள் எதுவோ அன்
றைக்கு நற்கரும அதிகாரியாவான். சரீரம் தோன்றும்
போதே பிணி, நரை, திரை, தளர்ச்சி இவைகள் பிறந்
தன. பிறந்ததுமுதல் இறந்ததுவரையில் என்ன சுகம்?
அவ்வாறும் எண்ணிப்பார்த்தால் எளிதிற் தெரியும்.
கண்டதெல்லாந் துன்பமே இப்படியெல்லா மிங்கு கஷ்
டப்பட்டு இறந்தும் எமபாசபந்தத்தில் அகப்பட்டுக்
கொண்டு படுகிறதும் துன்பமே. ஆகையால் நல்ல கல்வி
கேள்விகளை கேட்டு பெரியாரைப்பேணி ஆசாபாசத்
தை ஒருவிதமாயகற்றி ஆத்மக்கியானம் பிறந்து பிர
பஞ்சமாயை தெளிந்து மனத்துணிவுவந்தவ னெவனோ
அவன் பிறவிசாகரத்தை நீந்திக் கரையேறுவன்.

வேதாந்த இன்பம்கண்டு பேரின்ப மோனாநந்தம்
கொண்டவர்கள் இந்தத் துறவற மில்லறமென்னும் தரு
மத்திருந்து முத்திபெறலாகும். அஃதெவ்வாறென்
னில் மூவாசைமுதலிய பாசங்களிற் புளியம்பழத்தோடு
போற்பற்றற்றிருந்து அகம் புறமொத்து உற்றுப்பார்
த்தப்பேர்களுக்கு இல்லறத்து நடைபாவனை காட்டி
உள்ளம் பக்குவப்பட்டுத் துறவுபூண்டிருந்து பலனைப்
பெருகின்றபேருமுண்டு. ஆனால் பெண்டுபிள்ளை பண்டு
பதாத்தத்திலிருந்து பெருந்துறவடைவது மெத்தவும்
அருமை. அப்படிக்கானால் அது சத்துவப் பெருமை.
இன்னுஞ் சாங்கிய நூற்பயிற்சியாற் சாங்கியயோகத்தி
லிருக்கிறபேருக்குஞ் சித்தியான ஞானம்வரும் முத்தி
யும் பெருவார்கள். அஷ்டாங்க யோகத்திலிருந்து பர
முத்தியோகம் பாராட்டிய பேருக்கும் பதவிகிடைக்

கும். இரவும்பகலும் கிரியாசார நெறிதப்பாமல் ஈஸ்வரத்தியானம் செய்பவர்களுக்கும் இன்பமுண்டாகும். இம்முத்தியின்விவரம் யாதெனில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், யென்னும் பஞ்சபூதங்களும் வாக்கு பாதம் பாணி பாயுரு உபத்தம் என்னும் கருமேந்திரியங்களும் சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் எனத் தன்மாத்திரைகளும் சுரோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிராணம் என்னுமைம்புலன்களும் மனம், புத்தி, அகங்காரம், சித்தம், என்னும் நான்கு அந்தக்கரணங்களும் பிரகிருதி முதலாகிய தத்துவங்களும் தானல்லாமல் காண்பதுவே மோட்சமாம்.

* * *

## ஆசார அனுஷ்டானம்.

கங்காநதி தீரவாசியாகிய ஓர் பிராமணன் அவ்வூர் பிரஜைகளெல்லாம் ஆசாரயீனர்களென்றும் தான்மாத்திரம் ஆசார அனுஷ்டானங்களில் சிறந்தவனென்றும் நினைத்து கர்வங்கொண்டு அந்நதி ஓரத்தில் ஓர் ஆசிரமம் கட்டிக்கொண்டு ஊர் ஜனங்களுடன் சேராமல் தனியே வசித்துக்கொண்டுவந்தான். இப்படி யிருக்கையில் ஒருநாள் ஓர் வண்ணான் அந்த பிராமணன் ஸ்நானம் பண்ணுகிற துறை என்றறியாமல் அதில் தன்னுடைய துணிகளை பளீர் பளீரென்று தோய்த்துகொண்டிருந்தான். பிராமணன் அதைப்பார்த்து. "அடாபயலே! என்னுடைய துறையென் றுணராமல் அதில் உன்னுடைய துணிகளை துவைக்கிறையா; அப்பால்போ" என்றான். வண்ணான் துணிதோய்ப்பதிலேயே திருஷ்டியாயிருந்தபடியாலும் அங்கிருந்த சிற்சில முட்செடிகள் பிராமணனை மறைத்துக் கொண்டிருந்தபடியாலும் பிராமணன் சொன்னது வண்ணானுக்கு கேட்கவில்லை. அதனால் வண்ணான் தோய்க்கிறதை நிறுத்தாமலேயிருந்தான் அந்தணர் கோபங்கொண்டு வண்ணானிடத்தில் ஓடிவந்து "அட சண்டாளப்பயலே! நான்சொன்னதை மறுத்து உன்பாட்டில்தோய்த்துக் கொண்டிருக்கிறயா" என்று அவன் கன்னத்தில் பளீரென்றறைந்து தான்வண்ணானை தீண்டினபடியால் ஜலத்தில் ஸ்நானம்செய்தார். அப்போது வண்ணானும் முழுகினான். பிராமணன் வண்ணானைநோக்கி நான்தான் சண்டாளனாகிய உன்னைத் தீண்டினதால் முழுகினேன், நீ எதற்காக முழுகினாய் என்றார். வண்ணான் நானும் ஒருசண்டாளனைத்தீண்டினேன் அதனால் முழுகினேனென்றான். பிராமணன் அச்சண்டாளன் யாரென வண்ணான் சாந்தமூர்த்தியாகிய தங்களுடைய மனதில் கோபமாகிய சண்டாளன் வந்து உட்கார்ந்தான், அவன் என்னைத் தீண்டியபடியால் நானும் முழுகினேனென்றான். பிராமணன் வெட்கித் தலைகுனிந்தான். இதனால் ஒருவன் எவ்வளவு ஆசார அனுஷ்டானமுடையவனாயிருந்தாலும் அதெல்லாம் தேகசுத்திபர்த்தத்திற்காகவே செய்யப்படும் காரியங்கள். ஆசாரமெல்லாம் ஆத்மசுத்தியர்த்தமாகாது. ஒருவன் ஒருநாளைக்கு எத்தனை தரம் முழுகி முழுகி புதிய வஸ்திரங்களை உடுத்தாலும் அவனுடைய சரீரம் சுத்தியாயிருக்குமேயொழிய சரீரத்திற்கு மேம்பட்ட ஆத்மாவுக்கு யாதொரு சுத்தமுமாகாது. மீன் முதலை முதலியவைகள் ஜலத்திலேயே அநேக காலம் வசித்துக்கொண்டிருக்கின்றன. அதனால் அவைகளுக்கு ஏதாவது நல்லபதவிகிடைக்குமா? ஆகையால் ஒருவன் ஒருநாளைக்கு அநேகதடவை முழுகுவதினாலும் பிறரைக்கண்டால் எங்கே அவர்கள் தன்மேல் தீண்டிவிடுகிறார்களோ வென்றும் நடிப்பதில் யாதொரு பிரயோசனமு மில்லை.

இதனால் ஆசார அனுஷ்டானங்களை அனுஷ்டிக்கக் கூடாதென்பது கருத்தல்ல. இந்த ஆசார அனுஷ்டானங்களெல்லாம் தேகத்தைச் சேர்ந்ததும் இகலோக சாதனமாயுள்ளவைகளே யல்லாமல் பரலோகசாதனத்திற்குரியதன்று. இகம் பரம் இவ்விரண்டிலும் பரமே சிறந்ததாகையால் எப்போதும்மேன்மையானதையே அடைய தேடவேண்டிய படியால் அகங்கார மமகாரங்களை விடுத்து எது மேன்மையோ அதையடைய முயற்சிசெய்யுங்கள். எவனொருவன் அகங்கார மமகாரங்களைவிட்டு உண்மையில் பகவானை அறியவேண்டுமென நினைக்கிறானே அவனுக்கு ஜாதி மதம் முதலானவைகள் பகவானையடைய இடையூறாக நிற்கமாட்டா. நந்தனார் இழிந்த ஜாதியைச் சேர்ந்தவராயிருந்தும் அவருக்கு பகவான் எங்ஙனம் மோட்சமளித்தனர். அவர் பகவானிடத்தில் செலுத்தின அன்பினாலல்லவோ? இதனால் என்ன ஏற்படுகிறதென்றால் ஒவ்வொருவரும் அவனவன் ஜாதி கர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டியது அவசியமே. ஆனால் ஒவ்வொருவனும் தனக்குக்கு ஏற்பட்ட கர்மங்களைச்செய்வதுடன் பகவானைப் பற்றியும் சிறிது விசாரிக்கவேண்டும். விசாரணையின்றி காரியம் சாதகமாகாது.

உலக ஆசையை சிறிது வெறுத்து பகவானையடைய முயலுவோர் ஜாதி குலம் முதலானவைகளைக் கவனியார்கள். உதாரணமாக நமது முன்னோராகிய தபசிகளும் ரிஷிகளும் யோகிகளும் இன்னஜாதி, இன்ன குலம் என்று நமக்கு உறுதியாய் சொல்லமுடியாது. மகான்களாகிய பெரியோர்களுக்கு ஜாதி குலம் கிடையாது. அவர்களுக்கு எல்லாம்பகவானே, எல்லாம் பகவத் சுவரூபமாகவே காணப்படும்.

---

(Copy Right.)

## மனோகரன்.

(முன்தொடர்ச்சி.)

மகதவரசன் அனுப்பிய கடிதம்வந்து பத்துநாளாகின்றன. சந்திரசேகரன் தன்னூரைவிட்டுப்போவதற்கு இன்னும் ஐந்துநாள்தானிருக்கின்றன. இந்த சமாச்சாரம் சத்தியபுரிமுழுவதும் பரவியது. அவ்வூர் ஜனங்களெல்லாம் பிரபுவுக்கு மனமிரங்கி காரணமின்றித் துன்பத்தையுண்டுபண்ணும் அரசனை நிந்தித்தனர். உத்திரவு வந்து பத்துநாளாகியும் இன்னஊருக்குப்போவதென்று சந்திரசேகரன் நிச்சயம்செய்யவில்லை. ஒருநாள் காலை மந்திரியும் பிரபுவும் கொலுமண்டபத்திலிருந்து எந்த ஊருக்குப் போவதென்று யோசனைசெய்து அன்றையதினம் ஒருமுடிவுக்கும் வராமல் அடுத்தநாள் யோசிப்போமென்று விடுத்து மந்திரி தன்வீட்டுக்குச்செல்ல மேன்மாடியைவிட்டு கீழிரங்கும்போது, மந்திரியார் வீட்டுக்குப் போகிறாப்போலிருக்கிறதென்று ஒருவர் எதிரே வந்து சொன்னதைக் கேட்டவுடன் மந்திரி ஓகோ! எப்போதுவந்தீர்கள் சுலோசனரே! சௌக்கியந்தானோ? என்று கேட்டார். நான்வந்து இரண்டுநாளாச்சுது, சௌக்கியந்தான். உங்கள்பிரபுஎங்கிருக்கிறார்? என்று சுலோசனன் கேட்க, மேன்மாடியில் கொலுமண்டபத்திலிருக்கிறாரென்று மந்திரி பதில்கூறவும் சுலோசனன், என்ன விசேஷம்? அரசன் என்னமோ கட்டளையனுப்பிவைத்தானாமே நிஜந்தானோ? என்று சுலோசனன் கேட்டான். இதற்கு மறுமொழி விபரமாக மந்திரி சொன்னதைக்கேட்டு சுலோசனன் தான் வெளியில் கேட்ட சமாச்சாரம் பொய்யல்லவென்று நினைத்து மந்திரியைப் பிறகுப்பார்ப்பதாய்ச்சொல்லி மேன்மாடியிலிருந்த பிரபுவைக் காணச்சென்றான். சுலோசனன் வருவதைக்கண்ட சந்திரசேகரன் "வாருங்கள், வாருங்கள், சுலோசனரே!" என்று சொல்லி அவரை ஓர் ஆசனத்திலுட்காரச்செய்து தானும் அவருக்கெதிராக மற்றோர் ஆசனத்திலுட்கார்ந்துகொண்டு யாத்திரை சுகமாகயிருந்ததா? சத்தியபுரிக்கு எப்போதுவந்தீர்கள்? என்று கேட்டான்.

"சுலோசனன்"—யாத்திரை ஒருவாறு சுகமாகத்தான் முடிந்தது. நான் இவ்விடம்வந்து நாலுநாளாச்சுது.

"சந்திரசேகரன்"—அதென்ன? யாத்திரை ஒருவாறு சுகமாக யிருந்ததென்றீர்களே?

"சுலோசனன்"—நான் எத்தனை சினேகிதர்களோடும் வேலைக்காரர்களோடும் சென்றிருந்தபோதிலும், எனக்குள்ள பந்துக்கள் ஒருவருமில்லாது தனியே போனது அவ்வளவு திருப்தியாகவிருக்கவில்லை.

"சந்திரசேகரன்"—ஆமாம்; அது உண்மையே.

"சுலோசனன்"—நான் தங்களைப்பற்றி ஒரு சமாச்சாரம் கேள்விப்பட்டேன். அதற்காக நான் சிறிது விசனப்படுகிறேன்.

"சந்திரசேகரன்"—ஆமாம் அரசனது கட்டளைப்படி நடக்கவேண்டியதுதானே. விசனப்பட்டு என்ன செய்யலாம்.

"சுலோசனன்"—என்ன கட்டளை; காரணமின்றி ஓர் காரியமா?

"சந்திரசேகரன்"—காரணமின்றிக் காரியங் கண்டதில்லை. ஆகையால் இதற்கும் ஒரு காரணமிருக்கலாம் நமக்குத் தெரியவில்லை.

"சுலோசனன்"—காரணத்தை உங்களுக்குச் சொல்லாமல் ஓர் கட்டளை யிடுவது நியாயமா?

"சந்திரசேகரன்"—காரணம் பின்னால் சொல்லப்படுமென்று எழுதியிருக்கிறது.

"சுலோசனன்"—என்னமோ யிதெல்லாம் எனக்கு ஒன்றும் சரியாகவில்லை அரசனுக்கு அழகல்ல.

"சந்திரசேகரன்"—இதற்காக நான் முதலில் சிறிது மனவருத்தங் கொண்டேன். இப்போது எனக்கு அதைக்குறித்து கவலையில்லை. எல்லாம் ஜெகதீசன் செயலானபடியால் இது என்னுடைய நன்மைக்காகவே நடக்கக்கூடும்.

"சுலோசனன்"—உங்கள் தைரியத்தை நான்மெச்சுகிறேன், எந்த ஊருக்குப் போவதாய் தீர்மானித்திருக்கிறீர்கள்?

"சந்திரசேகரன்"—அதுதான் இன்னும் ஏற்படவில்லை.

"சுலோசனன்"—மகததேசத்தின் எல்லையோரமாக என்னுடைய சிறிய ஊர் ஆனந்தபுரியிருக்கிறது. அவ்விடத்திற்கு வேண்டுமானால் நீங்கள் போகலாம். உங்களுக்கு வேண்டிய ஏற்பாடு செய்து வைக்கிறேன்.

இதைச் சொல்லும்போது கேட்டுக்கொண்டிருந்த பிரபுவின் குமாரன் சந்திர குடன் "ஆனந்த புரியில் திருடர்கள் உபத்திரவம் அதிகமென்று சொல்லுகிறார்களே" என்றான்.

"சுலோசனன்"—அவ்வூரில் கோட்டையைப்போல என்னுடைய அரண்மனை யிருக்கிறது. அநேக காவலாளர் உண்டு. நீங்கள் திருடர்களுக்காக அஞ்ச வேண்டிய தில்லை. சந்திர சூடன் பால்லியமானதால் சிறிது அஞ்சுகிறான்.

"சந்திரசேகரன்"—சுலோசனரே! மிகவும் சந்தோஷம். நான் இரண்டு நாளையில் பிரயாணப் படுகிறேன். நீங்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்துவிடுங்கள்.

இவ்வண்ணம் சந்திரசேகரன் கூறியதைக்கேட்ட சுலோசனன் தான் எண்ணின காரியம் முடிந்ததென்று சிறிது சந்தோஷங்கொண்டு ஆனந்தபுரியைக் குறித்து விவரமாக இன்னும் அநேக சமாச்சாரங்களைச் சொல்லி சந்திரசூடனையும் சம்மதிக்க செய்தபின் சிறிது நேரம் சும்மாயிருந்தான். பின்பு சந்திரசூடன் தன் வேலையாக கொலுமண்டபத்தை விட்டகன்றபின் இது நல்ல தருணமென்றெண்ணி சுலோசனன் மறுபடியும் பேசவாரம்பித்தான்.

"சுலோசனன்"—சந்திரசேகரரே! ஒரு சங்கதி. இப்போது தங்கள் குமாரத்தி சுந்தரிக்கு விவாகம் நடக்க காலமாய் விட்டதன்றோ?

"சந்திரசேகரன்"—ஆமாம்.

"சுலோசனன்"—அதற்காக என்ன யோசனை செய்தீர்கள்?

"சந்திரசேகரன்"—அதைக்குறித்து யோசிக்குந் தருணத்தில் தான் அரசன் கட்டளை வந்தது. பிறகு அதைப்பற்றி யோசிக்க சாவகாசமில்லை.

"சுலோசனன்"—யாருக்கு விவாகஞ் செய்து கொடுப்பதாக உங்களுடைய எண்ணம்?

"சந்திரசேகரன்"—தகுந்த கணவன் இன்னும் அகப்படவில்லை. இன்னும் ஒரு எண்ணமும் கொள்ளவில்லை.

"சுலோசனன்"—சந்திர சேகரரே! நான் தங்களுக்கு மருமகப்பிள்ளையாக அருகனன்றோ?

"சந்திரசேகரன்"—ஆகா நல்லகேள்வி! தங்களுக்கென்ன பெரிய இராஜாக்களுடைய பெண் கிடைக்குமே. என் பெண்ணை விவாகஞ் செய்துகொள்ளுவீரா, என்ன பரிகாசஞ் செய்கிறீர்களோ?

"சுலோசனன்"—பரிகாசம் ஒன்றுமில்லை. தாங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

"சந்திரசேகரன்"—(சிறிது யோசித்து) நான் ஆனந்தபுரிக்குப் போனபின்பு உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

"சுலோசனன்"—மறந்து விடாதேயுங்கள். நான் இதுவரைக்கும் விவாகஞ் செய்துகொள்ளாம லிருந்ததற்குக் காரணம் சுந்தரிக்கு வயதாக வேண்டுமென்று தான். தங்களுடைய சம்பந்தம் எனக்கு நேரிட்டால் போதுமானது. எனக்கிருக்கும் தனம், தான்னியம், பூமி இவைகள் உங்களுக்குத் தெரியுமல்லவோ?

"சந்திரசேகரன்"—ஆகா தெரியும்; அதற்கென்ன குறைவு. நீங்கள் நல்ல வமிசத்தைச் சேர்ந்தவர்களே. உங்கள் தமையனார் நரேந்திரன் எனக்கு நன்றாய்த்தெரியும். அவரிருந்தபோது ஜயபுரி, ஆனந்தபுரி, இரத்தினபுரி முதலான அநேக பட்டணங்களை ஆண்டுகொண்டு வந்தார். அன்னியாயமாய்க் கொலைபாதகர்கள் அவரைக் கொன்று விட்டதால் தங்களுக்குச் சிறிது கஷ்டம் சேர்ந்தது, அப்போது மகதவரசன் தங்களுக்கு எல்லாப் பட்டணங்களையும் கொடுக்காமல் சிறிய ஊர்களாகிய ஆனந்தபுரி, இரத்தினபுரி, இவைகளைமாத்திரம் கொடுத்தான். இத்துடன் நரேந்திரன் மனைவி யணிந்திருந்த நகைகளெல்லாம் விலை யுயர்ந்தவை. அவைகளையும் பொக்கிஷப் பணத்தையும் தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டனவென்பதும் எனக்குத்தெரியும். எல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும். உங்களுக்குப் பெண்ணைக் கொடுப்பதற்கு நான் ஒன்றும் யோசிக்கவேண்டிய தில்லை.

"சுலோசனன்"—மிகவும் சந்தோஷம் சந்திரசேகரரே! இன்றைக்கு நான் இவ்விடத்திலிருந்து ஆட்களையனுப்பி ஆனந்தபுரியில், தங்களுக்காக எல்லா ஏற்பாடும் செய்வித்து தங்கள் வரவை எதிர்ப்பார்த்திருக்கும்படி வேலைக்காரர்களுக்கு கட்டளையனுப்புகிறேன். நீங்கள் குடும்பத்துடனேதானே போகிறீர்கள்?

"சந்திரசேகரன்"—ஆமாம், எல்லாரையுந்தான் அழைத்துக்கொண்டு போகவேண்டும்.

"சுலோசனன்"—சிறியசேனை ஏதாவது கூட்டிக்கொண்டு போகிறீர்களோ?

"சந்திரசேகரன்"—போர் வீரர் பத்துபேரைக் கூட்டிக்கொண்டு போகலாமென்று அரசனது உத்திரவு. அதன் பிரகாரம் பத்து போர்வீரர்கள் வருகிறார்கள். சம்பாதி, சாம்பன் மற்றுமுள்ள வேலைக்காரர்கள் வருகிறார்கள்.

"சுலோசனன்"—மனோகரன் சங்கதியென்ன?

"சந்திரசேகரன்"—அவன் ஏதோ மனக்கவலைகொண்டிருக்கிறான். அவன் சங்கதி அவனுக்குத் தெரிந்துவிட்டதுபோலிருக்கிறது, அவனையுங் கூட்டிக்கொண்டு போகிறேன். அவனை எங்கேபோகச் சொல்லுவேன்.

"சுலோசனன்"—நீங்கள் போகச் சொல்லலாமா? அவனுக்கு நல்ல வயது வந்துவிட்டபடியினால் அவனே யோசிக்கவேண்டியது. எத்தனை நாளைக்குத் தங்கள் வீட்டிலேயே யிருப்பது. அவன் தங்கள் பந்துவா யிருந்தால் ஒரு யோசனையும் வேண்டாம். அவன் இன்னஜாதியென்றும் இன்ன ஊரானென்றும் ஏற்படவில்லை. அன்னிய புருஷனை அரண்மனையில் வளர்ப்பது ஒரு காலத்தில் அனர்த்தமாய் முடியும். சிறியபேதை சுந்தரி யிருக்கிறாள். புத்திசாலியாயிருந்தாலும் பெண்தானே? ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். உங்களுக்குத் தெரியாத யோசனையா? நான் போய்வருகிறேன். நீங்கள் ஆனந்தபுரிக்குப்புறப்பட பிரயத்தினஞ்செய்யலாம். நான் உங்களைப் பிறகுவந்து பார்க்கிறேன்.

(இன்னும் வரும்.)

## நாஞசிவவாதக் கட்டளை.

(முன்தொடர்ச்சி.)

### பிரமம்.

பிரமமாவது பெரிதுக்கும் பெரிதாயிருக்கின்றதுவே பிரமம். பெரிதுக்கும் பெரிதாவது, ஜீவன் காரணசரீரத்திலிருக்கின்றமையால் காரணசரீரம்பெரிது. காரணசரீரம் சூட்சுமசரீரத்தி லிருக்கின்றமையால் சூட்சுமசரீரம்பெரிது. சூட்சுமசரீரம் ஸ்தூலசரீரத்தி லிருக்கின்றமையால் ஸ்தூலசரீரம் பெரிது. ஸ்தூலசரீரம் ஓர் வீட்டிலிருக்கின்றமையால் வீடு பெரிது. வீடு ஓர் கிராமத்திலிருக்கின்றமையால் கிராமம் பெரிது. கிராமம் ஓர் தேசத்திலிருக்கின்றமையால் தேசம் பெரிது. தேசம் பிருதுவியிலிருக்கின்றமையால் பிருதுவி பெரிது. பிருதுவி அப்புவிலிருக்கின்றமையால் அப்பு பெரிது. அப்பு தேயுவிலிருக்கின்றமையால் தேயு பெரிது. தேயு வாயுவிலிருக்கின்றமையால் வாயு பெரிது. வாயு ஆகாசத்திலிருக்கின்றமையால் ஆகாசம் பெரிது. ஆகாயம் விக்ஷேபசக்தியி லிருக்கின்றமையால் விக்ஷேபசக்தி பெரிது. விக்ஷேபசக்தி மாயையிலிருக்கின்றமையால் மாயை பெரிது. மாயையும் ஆகாசத்தைக்குறித்து ஒருசரீரம் ஏகதேசமாயிருக்கின்றதுபோல பிரமத்தினிடத்தில் மாயையும் ஏகதேசமாயிருக்கின்றமையால் பெரிதுக்கெல்லாம் பெரிதாயிருக்கின்றதுவேபிரமம்.

சர்வசாக்ஷி:— சர்வசாக்ஷியாவது, சர்வமாவது துவம்பதவாச்சியார்த்தங்களாகிய ஒன்பதும் தத்பதவாச்சியார்த்தங்களாகிய ஒன்பதும், அசிபதவாச்சியார்த்தங்களாகிய ஒன்பதும் ஆக மூவொன்பது இருபத்தேழினுடைய அன்வய வியதிரேகங்களை அறிந்துகொண்டிருப்பது சர்வசாக்ஷி.

துவம்பதவாச்சியார்த்தம்:— துவம்பதவாச்சியார்த்தமாவது ஸ்தூலசூட்சும காரணமாகிய சரீரத்திரயம் ஜாக்கிர சுவப்பன சுழுத்தியாகிய அவஸ்தாத்திரயம் விஸ்வதைஜத பிராக்ஞனாகிய அபிமானத்திரயம் ஆகிய இவைகள் அவஸ்தாத்திரயமாகிய ஜாக்கிர ஸ்வப்பன சுழுத்தி என்பவைகளுக்குப் பொருள். ஜாக்கிரம் அஸ்திரமில்லாமல் ஸ்திரமாய் பூர்வாபூர்வ நிச்சயத்துடனேயும் முன்பின் ஆலோசனையுடனேயும் பதினான்கு இந்திரியத்துடனேயும் கூடியிருக்கின்றமையால் ஜாக்கிரம். சுவப்பனமாவது ஜாக்கிரத்தினுடைய வாசனாத்திரயமாய் அந்தக்கரண விஷயாகாரமாய் பரிணமித்து ஸ்திரமில்லாமல் அஸ்திரமாய் பூர்வாபூர்வ நிச்சயமின்றி எதுவரையிலும் வியவகாரம் பண்ணுகிறதோ அதுவே சுவப்பனம். சுழுத்தி:— சுழுத்தியாவது ஸ்திரம் அஸ்திரமாகிய இரண்டுமில்லாதிருப்பதும் ஈருரையும்சூனியமாயிருப்பதுவும் சுழுத்தி.

அபிமானத்திரயமாகிய விஸ்வதைசத பிராக்ஞன் என்பவைகளுக்குப் பொருள்:— விஸ்வனாவது தேகாதிப் பிரபஞ்சனை அபிமானிக்கின்றமையால் விஸ்வன். தைசதன்:— தைசதனாவது அந்த அவஸ்தைக்கு அபிமானியாயும் தேசோமயனாயு மிருக்கின்றமையால் தைச

தன். பிராக்ஞனுவது மிக்கவறிவுள்ளவன். தற்பதவாச்சியார்த்தமாவது விராட் இரண்யகர்ப்பம் அவ்வியாகிருதம் என்பவைகளுக்குப் பொருள். விராட்டென்பது விரிந்திருக்கின்றது. இரண்யகர்ப்பம் பொன்போல பிரகாசிக்கின்றது. அவ்வியாகிருதமென்பது வித்தினிடத்தில் விருக்ஷமடங்கியிருப்பதுபோல அடங்கியிருப்பது. தத்பதவாச்சியார்த்தத்தில் அபிமானத்திரயமாகிய வைஸ்வானரன், சூத்திராத்துமா, அந்தரியாமி என்பவைகளுக்குப் பொருள்.

வைஸ்வானரன்:—வைஸ்வானரன் என்பது நரசம்பந்தமுள்ளவன்

சூத்திராத்துமா:— சூத்ராத்துமாவென்பது சகல சரீரங்களிலும் நூலில்மணிகோத்ததுபோலிருக்கிறவன்.

அந்தரியாமி:— அந்தரியாமியாவது அவரவர்கள் நல்வினை தீவினை மிசிரவினைக்கீடாக அவரவர்கள் இருதயத்தின்கண் மறைந்திருந்து அசைவிக்கின்றமையால் அந்தர்யாமி.

அசிபதவாச்சியார்த்தம்:— அசிபதவாச்சியார்த்தமாவது சத்ரூபசத்தி, சித்ரூபசத்தி, ஆனந்தரூபசத்தி, சரீரத்திரயம், சர்வவியாபகம், சர்வப்பிரகாசம், சர்வானந்தம், அவஸ்தாத்திரயம், பரிபூர்ணன், தேஜோமயன், பரமானந்தன், அபிமானத்திரயம் மும்மூன்றென்பதும் அசிபதவாச்சியார்த்தம்; மூவொன்ப திருபத்தேழினுடைய அன்வயவியதிரேகங்களை அறிந்துகொண்டிருப்பதே சர்வசாக்ஷி. அன்வயம், உற்பத்தி, வியதிரேகம், லயம், சர்வசாக்ஷியினிடத்தில் அக்கினியிற் சூடுபோல அபின்னமாக ஒருசத்தியுண்டு. அக்கினியினது உஷ்ணசக்தி அக்கினி தானல்லாமலும் அக்கினிக்கு அன்னியமல்லாமலும் அக்கினியினது உஷ்ணசத்தி மணிமந்திரஔஷதங்களால் பிரித்து வேறுகாணக் கூடாததுபோல் பிரமத்தினிடத்தில் ஏகமாயிருக்கின்ற ஒருசத்தியுண்டு. இந்தச்சத்தி அதீதப்பிரமத்தினிடத்தில் அடங்கியிருக்கும்போது அதீதப்பிரமம். மனம்வாக்குக் காயங்களால் அறியப்படாதது அதீதப்பிரமம். அதற்குச் சுத்தப்பிரமம் என்றுபெயர். இந்தச்சத்தி விசிரும்பித்து சுத்தப்பிரமத்தை வியாபிக்கும்போது அக்கினியினிடத்தில் உண்டான தூமம் அக்கினியை மூடிக்கொண்டதுபோல அப்பிரமம் பரைரவியாபகத்துக்குள்ளிருந்தபடியால், அதற்குப் பிரமம் என்றுபெயர். (பரை=மேலான) புருஷசன்னிதானத்தில் ஸ்திரீக்கு இன்பஞ்செனித்தார்போல அதிரூப யௌவர்ண கற்புடைய நாயகியினது நாயகன் தூரதேசத்திற்குப்போய் இருந்தவன் அவள் எண்ணத்திற் குறியாதிருக்க முன்வந்தமாத்திரத்தில் அந்தநாயகனது சந்நிதானத்தில் அந்நாயகிக்கு முகமலர்ச்சி, இன்பம், சரீரம்பூரித்தல், மயிர்க்குச்சு முதலானவையாகிய பிரமசன்னிதானத்தில் இலக்ஷணசூனியமாயிருக்கின்ற அந்தச்சத்தியினிடத்திலே அவிகிருதசத்வ, ரஜஸ், தமோகுணங்களுண்டாயின. எங்குமாயுள்ள பிரமசன்னிதானத்தில் (லக்ஷணசூனியம்=வடிவமில்லாதிருக்கின்றது.) அவிகிருத=வேறுபடாத அதந் சுத்தசத்துவத்திற்கு ஆனந்தரூப சத்தியென்று பெயர். சுத்தரஜஸுக்கு சித்ரூபசத்தியென்று பெயர். ஆனந்தமே வடிவமாயிருக்கின்றமையால் ஆனந்தரூப சத்தியென்றுபெயர். சுத்தரஜஸுக்கு பிரகாசமே வடிவமாயிருக்கின்றமையால் சித்ரூபசத்தியென்று பெயர். சுத்ததமசுக்கு திரிகாலத்திலும் ஒருபடித்தாயிருக்கின்றமையால் சத்ரூபசத்தியென்றுபெயர். அப்பரப்பிரமம் காரணமான ஆனந்தரூப சத்தியுடனேகூடி அதாவது இரண்டுசத்திக்குக் காரணமாயிருக்கின்ற ஆனந்தரூபசத்தியையடையும்போது அவருக்குப் பரமானந்தனென்னும் பெயர்போய்த் தேஜோமயனென்னும் பெயராம்.

சர்வப்பிரகாசம்:—சர்வப்பிரகாசமாவது சகலப்பிரகாசத்திற்கும் தான் காரணமாயும் தனக்கு ஒரு பிரகாசமும் காரணமல்லாததுவே சர்வப்பிரகாசம். அத்தேசோமயன் சத்ரூபசத்தியுடனேகூடி சர்வவியாபகமென்னும் சாக்கிராவஸ்தையை யடையும்போது அவருக்குத் தேசோமயனென்னும் பெயர்போய்ப் பரிபூரணரென்னும் பெயராம். தேஜோமயம்பிரகாசமே வடிவம். சத்ரூபசத்தி பிருதுவிதத்துவமுதல் பிரகிருதிதத்துவமீறாக எல்லா தத்துவத்திலும் வியாபித்து என்றுமுள்ளது. ஜாக்கிரவஸ்தை சமட்டி ஜீவரது ஜாக்கிராவஸ்தை பூர்ணம். பூர்ணமானது ரந்திரமன்னியில் நிரந்தரமாயிருப்பதுவே பூர்ணம். இந்த அகண்ட பரிபூரண சச்சிதானந்த பிரமத்தினிடத்திலே அகண்டம் கண்டிக்கப்படாதது, அதாவது ஒன்றினுலும் கண்டிக்கப்படாததுவே யகண்டம். அஃதெவ்விதமென்றுல் சார்வாகன் பௌத்தன் முதலிய மதங்கள் கன்மகாண்டத்தால் கண்டிக்கப்பட்டும் கன்மகாண்டம் பக்திகாண்டத்தால் கண்டிக்கப்பட்டும், பக்திகாண்டம் ஞானகாண்டத்தால் கண்டிக்கப்பட்டும், ஞானகாண்டத்தைக் கண்டிப்பதற்கு உபநிடதத்திற்கு மேற்பட்ட பிரமாண மில்லாததினுல் ஞானகாண்டத்தினுல் பிரதிபாதிக்காநின்றபிரமமே அகண்டம். பூர்ணமாவது தேசகாலவஸ்து பரிச்சேதமாயிருக்கின்றதுவே பூர்ணம். அஃதெவ்விதமெனில், தேசமாவது சேரதேசத்தில் பாண்டியதேசமில்லாதிருத்தல் போலும், பாண்டியதேசத்தில் சோளதேசமில்லாதிருத்

தல் போலும், பாண்டியதேசத்தில் சோளதேச மில்லாதிருத்தல் போலும், சோளதேசத்தில் சேரதேச மில்லாததுபோலு மில்லாமல் எல்லாதேசத்திலும்; காலமாவது சிருஷ்டி காலத்தில் பிரளயகால மில்லாதது போலும், பிரளயகாலத்தில் சிருஷ்டிகால மில்லாதது போலு மில்லாமல் சிருஷ்டிக்கு முன்னும், சிருஷ்டி காலத்திலும், பிரளயகாலத்திற்குப் பின்னும் திரிகாலத்திலும்; வஸ்துவாவது கடத்தில் படமில்லாதது போலும், படத்தில்கடமில்லாமலு மில்லாமல் எல்லாவஸ்துவிலும் எல்லாதேசத்திலும் எல்லாக்காலத்திலும் ரந்திர மன்னியில் நிரந்தரமா யிருப்பதுவே பூர்ணம். சத்தென்பது பழுதையினிடத்தில் சர்ப்பபீதி தோற்றுமுன்னும் தோற்றியகாலத்தும் பீதிநீங்கிய காலத்தும் ஒருபடித்தாயுள்ள பழுதையைப்போல சிருஷ்டிக்கு முன்னும் சிருஷ்டிகாலத்திலும், பிரளயத்திற்குப் பின்னும் பிரளயகாலத்திலும், திரிகாலத்திலும், ஒருபடித்தா யிருக்கின்றதுவே சத்து. சித்தென்பது சூரியன், தீபாதி சாதனங்களை அபேக்ஷியாது தன்னைக் கிட்டிய உழவு, தொழுவு, வரவு, வாணிபம், வித்தை, சில்பம், இந்த அறுவகைத்தொழிலேயும் தானுஞ் செய்யாது தன தேவலாலுஞ் செய்விக்காது தனது சன்னிதானத்தில் நடக்கின்றதுபோல, தானுஞ் சுயம்பிரகாசமா யிருந்து கொண்டு சூர்யாதி அஷ்டப்பிரகாசங்களையும் அபேக்ஷியாது அவஸ்தாத்திரயப் பிரபஞ்சத்தை விளக்கிவைக்கின்றமையால் சித்து. மின்னல் முதலிய அஷ்டப் பிரகாசங்களுக்கும் பிரகாசத்தைக்கொடுத்து தான் ஒரு பிரகாசத்தையும் அவலம்பியாது சுவயமே பிரகாசிக்கின்றது சித்து. அஷ்டப்பிரகாசமாவது மின்னல், நக்ஷத்திரம், சந்திரன், சூரியன், அக்கினியாகிய பிரகாசங்கள் ஐந்தும் சட்சு, மனஸ், ஜீவன் ஆகிய அந்தர்ப்பிரகாசங்கள் மூன்றும் அஷ்டப் பிரகாசங்களாம். ஆனந்தம்:—தேவாமிர்த மானது தானுஞ் சுகசொரூபியாயிருந்து தன்னைப்போஷித்து அனுபவித்த பேர்களுக்கும் நரை திரை மூப்பு பிணிகளையும் நீக்கிக் கற்பாயுள் பரியந்தம் சுகத்தைச் செய்விக்கின்றதுபோல தானுஞ் சுக சொரூபியாயும் நிரதிசயானந்தமாயு மிருந்துகொண்டு தன்னை அடுத்த விருத்திக்குச் சுகத்தைக் கொடுத்துக் கொண்டிருப்பதுவே ஆனந்தம்.

சிருக்குச் சந்தன வனிதாதி பஞ்சவிஷய போகங்களைக் கைவிட்டாலும் தன்னைக் கைவிடப்படாத அதிகப் பிரியமுள்ள வஸ்துவே ஆனந்தம். சிருக்கு சுகந்த புஷ்பங்களாகிய மாலைகள் சந்தனம் களபகஸ்தூரியோடு கூடிய சந்தனம் வனிதாதி ஸ்திரீ புத்ர தனதான்னிய ரசவர்க்க கீதநாட்டிய முதலிய பஞ்சவிஷய போகங்களைக் கைவிட்டாலும் தன்னைக் கைவிடப்படாத அதிப் பிரிய வஸ்துவே ஆனந்தம். பிரமம் சுத்தியிலிரசதந் தோன்றினாற்போல மூலப்பிரகிருதியென்றொரு சக்தி உண்டாயிற்று. திரிகாலத்திலு முள்ளதாயிருக்கின்ற பிரமத்தினிடத்தில் திரிகாலத்திலு மில்லாததா யிருக்கின்ற மூலப்பிரகிருதியென்று மொருசத்தி யுண்டாயிற்று. மூலப்பிரகிருதியாவது பிரபஞ்சத்திற்குக்காரணமாயும் உற்பத்தி ஸ்தானமாயும் ஒன்பதுவித லக்ஷணங்களினாலும் நிர்ணயிக்கப்படாத அனிர்வசனீயமா யிருக்கின்றதுவே மூலப்பிரகிருதி. ஒன்பதுவித லக்ஷணமாவது:—முதலாவது இச்சத்தியை சத்தென்று சொல்லுவோமானால் ஒன்றினாலும் வாதிக்கப்படாமல் திரிகாலத்திலும் ஏகமாயிருக்கவேண்டும். அப்படிக் கில்லாமல் தத்துவஞானத்தால் கெட்டுப்போகின்றபடியால் இச்சத்தியை சத்தென்று சொல்லக்கூடாது. இந்தச் சத்தியை அசத்தென்று சொல்லுவோ மானால் ஆகாயத்தாமரை, முயற்கொம்பு, மலடிமகன் முதலானதுகள் போல திரிகாலத்திலு மில்லாததாக வேண்டும். அப்படிக்கில்லாமல் ஜீவ ஈஸ்வரஜகத்தாகித்தோற்றிக்கொண்டிருக்கிறபடியால் இச்சத்தியை அசத்தென்றுஞ் சொல்லக்கூடாது. மூன்றாவது, இச்சத்தியை சதசத்தென்று சொல்லுவோமானால் இருட்டாதித்தன் என்பதுபோல ஒரு வஸ்துவிற்கு இரண்டுலக்ஷணஞ் சொல்லக்கூடாதாகையால் இச்சத்தியை சதசத்தென்று சொல்லக் கூடாது. நான்காவது இச்சத்தியை சாவயவமென்று சொல்லுவோமானால் இனி ஒரு சிருட்டிக்கு வித்தாக மாட்டாது, இனி ஒரு சிருட்டிக்கு வித்தாயிருக்கின்றபடியால் இச்சத்தியை சாவயவமென்றுஞ் சொல்லக் கூடாது. சாவயவம்=அவயவத்தோடு கூடியது. ஐந்தாவது, இச்சத்தியை நிரவயவம் என்று சொல்லுவோமானால் ஆகாசம்போல் சூனியமாயிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் நாமரூபப் பிரபஞ்சமாகத் தோற்றிக் கொண்டிருக்கிறபடியால் இச்சத்தியை நிர் அவயவமென்றுஞ் சொல்லக்கூடாது. ஆறாவது இச்சத்தியை சாவயவ நிர் அவயவமென்று சொல்லுவோ மானால் வேளாளதீக்ஷிதன் என்பதுபோல ஒரு வஸ்துவிற்கு இரண்டுலக்ஷணஞ் சொல்லக்கூடாது. இச்சத்தியை சாவயவ நிர் அவயவமென்றுஞ்சொல்லக்கூடாது. ஏழாவது, இச்சத்தியை அபின்னமென்று சொல்லுவோமானால் பிரமத்தினிடத்தில் ஏகமாயிருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் தேகாதிப் பிரபஞ்சமாய்த் தோற்றிக் கொண்டிருக்கிறபடியால் இச்சத்தியை அபின்னமென்றுஞ் சொல்லக்கூடாது. எட்டாவது, இச்சத்தியை பின்னமென்று சொல்லுவோமானால் வேதாந்தசாஸ்திரத்தில் இரண்டு சத்து. இச்சத்தியை பின்னமென்றுஞ் சொல்லக்கூடாது. ஒன்பதாவது, இந்தச்சத்தியை பின்னாபின்னமென்றுசொல்லுவோமானால் புருஷஸ்திரீ என்

பதுபோல ஒரு வஸ்துவிற்கு இரண்டுலக்ஷணஞ் சொல்லக்கூடாதாகையால் இச்சத்தியை பின்னுபின்னமென்றுஞ் சொல்லக்கூடாது. இப்படி ஒன்பதுவித லக்ஷணங்களாலும் நிர்ணயிக்கப் படாததினுல் அநிர்வசனீயமென்று சொல்லப்பட்டது. அந்த மூலப்பிரகிருதியும் விகிருதசத்துவ ரஜசு தமசு என்னும் முக்குணங்களும் வெள்ளைநூல் சிவப்புநூல் முறுக்கிய மூன்று கயிறுபோல கூடியிருக்கும். அந்தப் பிரகிருதியின் சத்துவகுணத்திற்கு மாயையென்றும் சர்வக்ஞ உபாதிஎன்றும் ஈஸ்வரகாரண சரீரமென்றும் பெயர். அந்தப் பிரகிருதியின் சத்துவகுணத்திற்கு மாயையென்றும் பெயர். சர்வக்ஞ உபாதியென்றும், ஈஸ்வரகாரண சரீரமென்றும் பெயர். படிகக் கல்போலொத்த சத்துவகுணம் மாயை பிரபஞ்சத்திற்குக் காரணமாயும் மித்தையே சொரூபமாயுமிருப்பது. சர்வக்ஞ உபாதி,சர்வக்ஞத்துவாதி கல்யாணகுணங்களுக்கு உபாதியாயிருப்பது. ஈஸ்வரகாரண சரீரம்:— ஈஸ்வரகாரண சரீரமாவது ஈஸ்வரன் பிரதிபிம்பிக்கிறதற்குக் காரணமா யிருக்கின்றமையால் ஈஸ்வரகாரண சரீரமென்று பெயர். அந்த மாயையினிடத்தில் நிர்மல ஜலப் பிரதிபிம்பம்போலப் பிரமம் சலக்ஷணமாகப் பிரதிபிம்பிக்கும். தெளிந்த ஜலத்தில் பிரதிபிம்பிக்காநின்ற சூரியப் பிரதிபிம்பம்போல் பிரமம் தன்னுடைய சுயலக்ஷணமாகிய சச்சிதானந்த லக்ஷணம்மறைபடாது ஸ்பஷ்டமாய்ப் பிரதிபிம்பிக்கும், அந்தச் சைதன்னியப் பிரதிபிம்பத்திற்குச் சர்வக்ஞனுகிய ஈஸ்வரனென்று பெயர். சர்வக்ஞத்துவாதி கல்யாண குணங்களையுடைய ஈஸ்வரனென்று பெயர். சர்வக்ஞத்துவாதி குணங்களாவன:-சர்வக்ஞத்துவம் சர்வேஸ்வரத்துவம் சர்வாந்தரியாமித்துவம், சர்வ நியந்தரத்துவம் சர்வகாரணத்துவம் சர்வ சக்தித்துவம் ஆக ஆறு சர்வக்ஞத்துவம். சர்வக்ஞத்துவமாவது:— சிருட்டிதொடங்கி விடடையுமளவும் சர்வஜீவர்களது கர்மங்களை ஏககாலத்தில் ஒருங்குணர்ந்திருத்தலே சர்வக்ஞத்துவம். சர்வேஸ்வரத்துவம் சராசராத்துமமாகிய சகலப் பிரபஞ்சங்களைத் தான் உண்டுபண்ணியும் தன்னல் உண்டுபண்ணப்பட்ட பிரபஞ்சங்களை மற்றொருவரால் மாற்றக் கூடாமையும் தன்னை உண்டுபண்ண ஒருவருமில்லாததுவே சர்வேஸ்வரத்துவம். சர்வாந்தரியாமித்துவமாவது:- பாவையை ஆட்டுகின்ற சூத்திரதாரிபோல் சகல ஜீவர்களது இருதயத்திலிருந்து அவரவர்கள் கன்மப்படி விதி நிஷேதவழியில் ஆட்டிவைப்பதுவே சர்வாந்தரியாமித்துவம். சர்வநியந்தரத்துவமாவது:- தன்னல் உண்டுபண்ணப்பட்ட பிரபஞ்சங்களைத்தான் நியமித்த நியமப்படி நடத்திவைப்பதுவே சர்வ நியந்தரத்துவம். சர்வ காரணத்துவமாவது சகல காரணத்திற்குந்தான் காரணமாயும் தனக்கு யாதொருகாரணமு மில்லாதிருப்பதுவே சர்வகாரணத்துவம். சகல சத்தித்துவமாவது சகல சத்திகளும் தனது சத்தியாயிருக்கின்றதுவே சர்வ சத்தித்துவம். இந்தச் சத்துவகுண மாயையினிடத்தில் சத்துவத்தில சத்துவம் சத்துவத்தில் ரஜசு சத்துவத்தில் தமசுஎன்னும் மூன்றுகுணங்களுண்டாயின. சத்துவத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரனுக்கு சகத்தை ரக்ஷிக்கையினலேவிஷ்ணுவென்று சொல்லப்படும். சத்துவத்தில் ராஜஸம் தாமசம் இவ்விரண்டுமடங்கி சாத்துவிகம் மேலிடும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரனுக்கு ஜகத்தை ரக்ஷிக்கையினலே விஷ்ணுவென்றுசொல்லப்படும். இந்த ஸ்திதி ஹிதஸ்திதி அகிதஸ்திதி என்று இரண்டு வகைப்படும். ஹிதஸ்திதியாவது விதியாயுள்ள சுகவஸ்துக்களை சுகமாய் ஊட்டிவைப்பது. அகிதஸ்திதியாவது விலக்காயுள்ள துக்கவஸ்துக்களை சுகமாய் ஊட்டிவைப்பது. இப்படி ஹிதஸ்திதியாக ரக்ஷிக்கிறவருக்கு விஷ்ணுவென்றுபெயர். சத்துவத்தில் ரஜசு பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரனுக்கு சகத்தை சிருட்டிக்கையினலே பிரமாவென்று பெயர். சத்துவத்தில் சாத்துவிகம் தாமசம் இவ்விரண்டுமடங்கி ராஜசம் மேலிடும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரன் ஜகத்தை சிருட்டிக்கையினலே பிரமாவென்று பெயராம். மூவகைஜாதியாவது, உத்தமம், மத்திமம், அதமம் என மூன்று. நால்வகையோனியாவது சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜம் என நான்கு. இவற்றில் சராயுஜமாவது பையிலிருந்து கட்டப்பட்டு ஜனிக்கின்றமனிதர் ஆடு மாடு மிருகங்கள் முதலியவைகளாம். அண்டஜமாவது முட்டையிலிருந்து ஜனிக்கப்பட்ட மயில் குயில் கோழி ஆமை சர்ப்பம் முதலியவைகளாம். உத்பிஜமாவது விதையிலிருந்து முளைக்கப்பட்ட மரம்செடி கொடி முதலியவைகளாம். சுவேதஜமாவது புழுக்கம் வேர்வைகளினின்று உண்டாகும் கொசு,புழு, ஈமுதலியவைகள் சுவேதஜமென்று சொல்லப்படும். எழுவகைத் தோற்றங்களாவன: ஊர்வன, நடப்பன, பறப்பன, நீர் வாழ்வன, மரம், கொடி, செடி என ஏழாம். எண்பத்து நான்குலக்ஷம் சீவராசி பேதங்களாவன:— தேவர் பதினன்குலக்ஷம்,மனிதர் ஒன்பதுலக்ஷம்,புள்பத்துலக்ஷம், மிருகம் பத்துலட்சம், ஊர்வன பதினெருலட்சம், நீர் வாழ்வன பத்துலட்சம், தாவரமாகிய மரஞ்செடி கொடி இருபதுலட்சம் என (அசு) எண்பத்துநாலு லட்சங்களாம். சத்துவத்தில் தமசு பிரதானமாகும்போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரன் ஜகத்தை சம்ஹாரம் செய்கின்றபடியினலே ருத்திரன் என்று சொல்லப்படும்.

(இன்னும்வரும்.)

## அன்பு.

(முன்தொடர்ச்சி.)

அடைதற்கருமையான இறைச்சிகளைத் தீயில் வாட்டி வாயில் மென்றுவிழுங்காது வேறிடத்து உமிழ்கின்றான். மிக்க பசியுடையவனா யிருந்தாலும் அதைக் குறித்து எம்மோ டொன்றும் சொல்லா திருக்கின்றான். நமக்கும் அவ்விறைச்சி யுணவைப்பகுந்து கொடுக்குந் தன்மையையும் அறியாதிருக்கின்றான். மிகுந்த இறைச்சியைப் புறத்தில் எறிகின்றான். இந்தத் திண்ணன் தெய்வமருளடைந்தான். இதை நீக்கும் உபாயம் நாமறியோம். ஆகையின் தேவராட்டியை நாகனோடு அழைத்துக்கொண்டுவந்து இம்மருளைத் தீர்க்கவேண்டும். அவ் வேட்டைக் காட்டில் இருக்கும் ஏவலாளர்களையும் அழைத்துக்கொண்டு தந் தேசமாகிய உடுப்பூருக்குச் செல்வோமென்று ஒருவரோடொருவர் தம்முள்பேசிக் கொண்டுபோய் விட்டார்கள். தம்முயிர்த் தோழராகிய காடன், நாணன் என்னும் இருவேடர்களும் தம்மை விட்டு நீங்கிய செய்கையைத் திண்ணனார் அறியாதவராய் தொன்னையினிடத்து இறைச்சியாகிய திருவமுதை வைத்துக்கொண்டு, திருமஞ்சன மாட்டும்படி நினைந்து மிக்க சிறப்பினைவாய்ந்த பொன்முகலி யாற்றின் நல்ல நீரை பரிசுத்தமாகிய திருவாயில் திருமஞ்சனமாக அமைத்துக் கொண்டு, சாத்தும் பொருட்டுப் பறித்த திருப்பள்ளித் தாமத்தை (புஷ்பத்தை) குடுமியின்மேல் நெருங்கும்படி செருகிக்கொண்டார். ஒரு திருக்கரத்தில் விஷத்தைக் கக்காநின்ற கொலைத்தொழிலைச் செய்யும் அம்பினோடு வில்லைப் பிடித்துக்கொண்டு மற்றொருகரத்தில் தொன்னையின்கண் வைத்திருக்கும் பரிசுத்தமான மெல்லிய இறைச்சியாகிய நல்ல திருவமுதை யேந்திக் கொண்டு இனியவராகிய எமது முதல்வர் மிக்கபசியால் வருந்துவர் என இரக்கமுற்று திகைப்படைந்து வாயுவேகம், மனோவேகம் என விரைவாயோடிக் காளத்திநாதரது திருமலையைத் திண்ணனார் அடைந்து, அத்திருமலையில் உதித்தெழுந்த குடுமித்தேவரைத் தரிசித்து, அவர் திருமுடியின் மீது முன் சாத்தப்பட்ட மலரைத் தன் திருவடியிலுள்ள அழகிய செருப்பினாற் போக்கி, தன் திருவாயில் கொண்டுபோன திருமஞ்சன நீரைத் தன்னுள்ளத் ததித்த அன்பை யுமிழ்கின்ற வரைப்போல காளத்தியார் திருமுடிமேல் அபிஷேகமாகப்பெய்து, தன் திருமுடியின்மேல் செருகிவைத்திருந்த பூங்கொத்தை அக்காளத்தி நாதரது திருமுடியின்மீது தொழுது சாத்தி, தொன்னையில் வைத்திருந்த இறைச்சியாகிய திருவமுதைச் சுவாமியின் திருமுன்னே வைத்து சுவாமி! கொழுமையாகிய இறைச்சிகளையெல்லாம் அம்பினால் ஆராய்ந்தெடுத்து அதிற்கோத்து தீயில் மிக்க பதத்தோடு காய்ச்சி, அவைகளைப் பல்லினாலே மென்று இதற்கு முன் எனக்கிருந்த பழக்கவாசனையினாலே சுவைபார்த்து வைக்கப்பட்ட இம்மாமிசமானது மிகவும் நன்றாயிருந்தது. ஆகையினால் நாயனாரே! நீரே திருவமுது செய்தருள வேண்டுமென்னும் இவ்வாறான இதமொழிகளைக் கூறி காளத்திநாதரைத் திருவமுது செய்வித்தார். சூரியனும் அஸ்தமித்தான். அன்றிரவெல்லாம் தன் கையில் வில்லை யேந்திக்கொண்டு காட்டு மிருகங்களினால் குடுமித்தேவருக்கு தீங்கு நேரிடுமென்றெண்ணி மலையையும் வனத்தையு மடைந்து செயற்கரிய தவத்தைச்செய்தும் அறியக்கூடாத சிவபிரானை அடங்காத அன்பு காரணமாகத் தரிசித்துக்கொண்டு அவர் பக்கலில் மலவிருள் நீங்கும்படி நின்றுகொண்டிருந்தான். பிறகு இருள்விடிய அந்நேரத்தை யுணர்ந்த பறவைகளின் சத்தத்தைக்கேட்டு கரிய கடலைப்போலத் தூங்காது நின்றுகொண்டிருந்த திண்ணனார் சிவபெருமானுக்கு திருவமுது சம்பாதிக்க நினைத்து பன்றிகள், கருமான் கூட்டங்கள், புள்ளிமான்கள், மற்றும் வேறு வேறு மிருகங்களையும் தான் வேட்டையாடுஞ் சாமர்த்தியத்தினாலே அவைகளைக் கொல்லுங்கால மறிந்து ஒருவர் முகம் ஒருவருக்கு மிகவுந் தெரியாதபோது வில்லையெடுத்துக்கொண்டு காளத்தியாரை வணங்கி வேட்டையாடப்போனார். இது சமயம் நீலகண்டத்தையுடைய காளத்திநாதரைத் தினந்தோறும் வழிபாடு செய்துவரும் தவசிரேஷ்டராகிய சிவகோசரியார் என்னும் அந்தணர் சைவாகமங்களில் விதித்த வண்ணம் பூசைக்குத் தகுந்த புஷ்பங்களும் திருமஞ்சனமும் முதலிய உபகரணங்களை எடுத்துக்கொண்டு திருக்காளத்தி மலையின்மீதுள்ள சிவபிரானுக்கு எதிரேவந்தபோது அவர் முன்னே இருந்த இறைச்சியையும் எலும்பையும் கண்டு மிக்க பரிதாபத்தோடு இப்படிப்பட்ட அநுசிதமாகிய கெட்ட செய்கையை மனதில் கொஞ்சமேனும் அச்சமில்லாத வேடர்களே செய்திருப்பார். தேவர்களுக்கு தேவராயிருக்கின்ற மகா தேவா! உமது திருமுன்பு இவ்வாறு செய்து போகலாமா, இவ்வாறு செய்யும்படி திருவுள்ளஞ் செய்யலாமா எனத் திருமேனி பதறி கண்ணீர்விட்டழுது நிலத்தில் விழுந்தெழுந்து திருவலகினாலே இவ்வநுசிதங்களையும், திண்ணனார் காலடியையும், நாயடியையும் போக்கி மறுபடியும் பொன் முகலியாற்றில் நீராடி விரைவாகவந்து பிராயச்சித்தம்செய்து பரிசுத்தமாகிய பூசையினைத் தொடங்கி திருமஞ்சன மாட்டி சந்தனஞ் சாத்தல், புஷ்பஞ்சாத்தல், தூபங் கொடுத்தல், தீபங்கொடுத்தல், நீவேதித்தல் என்னும்

ஐந்துபசாரங்களைச்செய்து வேதமந்திரங்களால் தோத்திரஞ் செய்து காளத்தி நாதரிடத்து விடைபெற்றுக் கொண்டு சிவகோசரியார் தபோவனத்தை யடைந்தார்.

(இன்னும்வரும்.)

## NEWS AND NOTES.

திருநெல்வேலிஜில்லாவில் குற்றாலம் என்ற க்ஷேத்திரமுளது. அவ்விடம் வெகு குளிர்ச்சியானபடியால் நமது இராஜதானியிலுள்ள இங்கிலீஷ்காரர் கோடைகாலத்தைக்கழிக்க அவ்விடஞ் செல்கிறார்கள். அந்த க்ஷேத்திரத்துக் கோவிலுக்குப் பக்கத்தில் மலைமேலிருந்து அருவி ஓடிவருகிறபடியாலும் அந்நீரில் ஸ்நானமாடுமிடத்து செய்த பாவங்கள் தீருமென்று ஹிந்துக்களுள் பலர் நம்பி அவ்விடம்போய் வருகின்றனர். இப்போது காட்டிலாகா அதிகாரிகள் நீர்விழுமிடங்களையும் அதன் சுற்றுப்பக்கங்களையும் ரிசர்வ் காடுகளாகச் சேர்த்துக் கொண்டனராம். அக்கோயில் தர்மகர்த்தர்கள் அவ்வதிகாரிகள்மேல் தாவா செய்திருப்பதாகவும் தெரியவருகிறது.

* * *

ஓர் பட்டணத்தில் விசேஷ பூஸ்திதிவந்தனை ஒருவன் சூதாட்டத்தில் தனக்கிருந்த திரவியங்களையெல்லாம் போக்கடித்துக்கொண்டு பிறகு தன் பெண்ஜாதியை பந்தயம்வைக்க இசைந்தானும். இதன்பேரில் மற்றொருவன் அனேகபவுன் அப் பெண்மணிக்குப் பந்தயம்வைத்து கடைசியாக கெலித்துவிட்டான். பிறகு பெண்டிழந்த படுபாவி தன் தலையை பிளந்து கொண்டானும். காரியம் முடிந்தபிறகு இவன்தலையை பிளந்து கொண்டாலென்ன? இவன்தலையில் இடிவிழுந்தாலுமென்ன? இவனுக்கு சூதாட்டத்தில் ருசி தன் பெண்ஜாதியென்றும் சிந்திக்காமலே பந்தயம்வைக்கத் துணிவுகொண்டானல்லவா!

* * *

அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா சர்வகலாசாலையில் கலைபயிலும் மாணவரில் சிலர் தங்கள் கல்விச் செலவுக்காக ரஜாக்காலங்களில் கடற்கரையோரமாயுள்ள ஓட்டல்களில் ஏவலாட்களாயும் எலெக்டிரிக் டிராம்வேக்களில் கண்டக்டர்களாயும் வேலைசெய்து சம்பாதிக்கின்றனராம். கல்வியின்மீதுள்ள நாட்டத்திற்கு நாணமொன்று மில்லையல்லவா;

சிம்லாவில் ஜலசௌகரியத்தை யுத்தேசித்து சட்லேஜ் என்னும் நதியில் ஜலம் உபயோகப் படுத்திக் கொள்ளலாமென்று பஞ்சாப் கவர்ண்மெண்டார் ஆலோசனைக்கு தெரிவித்துக்கொண் டிருக்கிறார்கள்.

சென்னை காலநிலை:— இரண்டுநாளாய் சூரியபகவானுடைய தரிசனம்காண்கிறது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. வருணபகவானுடைய கருணை அதிகமாயிருக்கிறது. வருணபகவானுக்குப் பயந்து வழக்கமாய் போகவேண்டிய இரங்கூன் ஸ்டீமர் நேற்றியதினம் (5-11-03.) சென்னையிலிருந்து இரங்கூனுக்குப்போகவில்லை.

* * *

கராச்சியில் இப்போது பிளேக்குநோய் ஓய்ந்திருப்பதால் அந்த ஊரிலிருந்து ஜனங்கள் மாகாணத்திற்கு வரலாமென்று கவர்ண்மெண்டார் உத்திரவு கொடுத்திருக்கிறார்கள்.


இகபரசுகசாதனி சந்தாதாரர்களுக்கு

பெருத்தலாபம்! பெருத்தலாபம்!!

இச்சமயத்தை கைவிடாதீர்கள்

# வள்ளலார்சாஸ்திரம்.

இது மேன்மைபெற்ற நூல்களிலொன்று. வேதாந்த சித்தாந்த சமரசமாகிய இந்நூலை, இருபதுசாஸ்திரங்களாக சிவஞானவள்ளலார் எல்லோருக்கும் எளிதில் பொருள்விளங்குமாறு இனிய செய்யுள்களாக திருவாய் மலர்ந்தருளினர். நமது மதத்தின் இரகசியம், உண்மை, பெருமை இவைகளை அறியவேண்டின் இப்புத்தகத்திலுள்ள சத்தியஞானபோதம், பதி பசு பாசவிளக்கம், ஞானவிளக்கம், அத்துவிதக்கலிவெண்பா, அதிரகசியம், கர்னுமிர்தம், சுருதிசாரவிளக்கம் என்னும் அதிகாரங்களைப் படிப்பாராயின் நன்றாகவிளங்கும். இந்நாலின் கடைசியில் இந்துமதாபிமானிகளுக்கு அடிக்கடி எழும் சங்கைகளை அறுபத்துநான்காகவகுத்து அவைகளுக்குத் தக்க சமாதானம் மேற்கோளுடன் எழுதியிருக்கிறது. இவ்வருமையான புத்தகத்தின்விலை 1—8—0.

இப்புத்தகத்தை இகபரசுகசாதனி சந்தாதாரர்களுக்காகவே ஒவ்வொருவரும் ஒருபுத்தகம் முக்கியமாய் வாசிக்கவேண்டிய நூலானபடியால் பாதிவிலையாகிய 12-அணா என்று நியமிக்கப்பட்டது. வேண்டுபவர்கள் 1903வரு டிசம்பர்மீ 31உக்குள் இகபரசுகசாதனி ஆபீசுக்கு எழுதி பெற்றுக்கொள்ளவேண்டியது. மேற்கண்ட தேதிக்குமேல் இவ்விலைக்குக் கொடுக்கப்படமாட்டாது. வி. பி. சார்ஜு அணா-3 ஆகும்.

இப்படிக்கு,

☞ கொ-லோகநாதமுதலியார்.

"இகபரசுகசாதனி ஆபீஸ்" சென்னை.